1991


# தமிழர் தகவல்
## TAMILS' INFORMATION

இதழ் 9 ISSUE

ஒக்டோபர் OCTOBER











இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி • A MONTHLY INFORMATION DIGEST

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழர் தகவல்**
P.O. Box - 3, Station 'F'
Toronto, Ont. M4Y 2L4
Phone: (416) 920-9250

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்
ரொறன்ரோ
&
கத்தோலிக்க
குடிவரவு நிலையம் ஸ்காபுரோ
தொலைபேசி (416) 757-7010

வெளியீடு
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வடிவமைப்பு
அகிலன் அசோஷியேட்ஸ்

ஆசிரியர்
எஸ்.திருச்செல்வம்

உதவி ஆசிரியர்
றஞ்சி

விநியோக முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்
(416)921-7076

புகைப்படங்கள்
பதி, குகன், விஜயன்

அச்சுப்பதிப்பு
றிப்ளக்ஸ் பிரிண்டிங்
(416) 975-0196

**TAMILS' INFORMATION**
P.O. Box - 3, Station 'F'
Toronto, Ont. M4Y 2L4
Phone: (416) 920-9250

**Produced by**
EELAM THAMIL INFORMATION CENTRE OF TORONTO (ETHIC)
&
CATHOLIC IMMIGRATION BUREAU SCARBOROUGH REGION
Phone: (416) 757-7010

**Published by**
THAMIL INFORMATION & RESEARCH UNIT (THIRU)

**Design**
AHILAN ASSOCIATES

**Editor**
THIRU S. THIRUCHELVAM

**Asst. Editor**
RANJI

**Circulation Manager**
S. T. SINGAM
(416) 921-7076

**Photos**
PATHY, KUGAN & VIJAYAN

**Layout & Printers**
REFLEX PRINTING
(416) 975-0196

## ஆசிரியரிடமிருந்து......................................FROM THE EDITOR

கனடாவில் வாழும் தமிழர்களின் பிரச்சனைகள், தேவைகள், எதிர்பார்ப்புகள் பற்றி கடந்த இதழ்களில் இந்தப் பகுதியில் தொட்டுக் காட்டி எழுதியுள்ளோம்.

கனடாவில் குடியேறுவதற்கு மேலும் மேலும் தமிழர்கள் வந்து கொண்டிருப்பதால், பிரச்சனைகளும், தேவைகளும் விஸ்தரிப்பது தவிர்க்க முடியாதது. 'தேவை'கள் என்று குறிப்பிடுவது வேலைவாய்ப்பு, கல்வி வசதி, பொருளாதாரக் குறைவு ஆகியவைகளையே மையமாகக் கொண்டவை.

கனடாவின் தற்போதைய பொருளாதாரப் பின்னடைவினுல் அரசாங்க தனியார்துறை வேலைவாய்ப்பு, 'வால்' போலக் கீழ் நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றது. இதனுல் பலரும் சுயவேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் நிலைமை ஏற்பட்டு வருகின்றது.

இதன் காரணமாக எம்மவர்கள் பலர் தற்போது, பொதுவாகக் கடைகள் என்று கூறப்படும் வர்த்தக நிலையங்கள் ஸ்தாபிப்பதில் கூடிய அக்கறை காட்டி வருகின்றனர். இந்த முயற்சியானது எம்மவர்களுக்கு வேலைவாய்ப்பை அளிப்பதுடன், நுகர்வாளர்களுக்கும் தங்களின் பாரம்பரிய உணவுப் பொருட்களை இலகுவாகப் பெற்றுக் கொள்ளச் சந்தர்ப்பமளிக்கிறது.

கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பொன்றின்படி ஐம்பத்து மூன்று (53) தமிழர் பல சரக்கு விற்பனை நிலையங்கள் ரொறன்ரோ பெரும்பாகத்தில் தற்போது இயங்கி வருகின்றன. இது தவிர நகைக் கடைகள், வீடியோ, ஓடியோ விற்பனை நிலையங்கள், ஜவுளிக் கடைகள், மீன், இறைச்சிக் கடைகள், உணவகங்கள் என்று பார்த்தால் சுமார் நூற்று ஐம்பது வரையான தமிழர்களின் வர்த்தக நிலையங்கள் அங்கும் இங்குமாக ஒன்ராறியோவில் உள்ளன.



சண்முகநாதன்

வர்த்தக நிலையங்களின் தொகை அதிகரிக்கும் அதே வேளையில் மற்றெரு அச்சுறுத்தலையும் இவை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. கனடாவை இன்று பயமுறுத்திவரும் துப்பாக்கிமுனைக் கொள்ளை, கொள்ளைக்கான கொலைச் சம்பவங்களிலிருந்து தமிழர் வர்த்தக நிலையங்கள் தங்களை எவ்வாறு காப்பாற்றிக்கொள்ளப் போகின்றன?

மிஸிஸாகவிலுள்ள ஆனந்தா ஸ்ரோர்ஸின் உள் பகுதியில் அமைந்துள்ள சக்தி ஜுவலறியில் கடந்த மாதம் மூன்றும் திகதி பட்டப்பகலில் இடம் பெற்ற கொள்ளை, - கொலை முயற்சிச் சம்பவம் அனைவரது கண்களையும் அகலமாகத் திறக்கச் செய்துள்ளது.

துரதிர்ஷ்டவசமாக இந்தச் சம்பவத்துக்கு கனடிய பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. ஒரு வரி கூட இதனைப்பற்றி எழுதவில்லை. உள்ளூர் ரெலிவிஷன் ஒன்று மட்டும் இந்தச் சம்பவத்தை அன்றிரவு ஒளிபரப்பியது. அத்துடன் இந்த விடயம் முடிக்கப்பட்டுவிட்டது.

கைத்துப்பாக்கிகள் சகிதம் இரண்டு வியட்நாமிய இளைஞர்கள் அன்றைய தினம் பிற்பகல் 2:30 மணியளவில் ஆனந்தா ஸ்ரோர்ஸுக்குள் சென்றனர். ஒருவர் பின்பகுதியிலுள்ள சக்தி நகைக் கடைக்குள் சென்று நகைகள் வாங்குவது போலப் பாவனை பண்ணி அனைத்து நகைகளையும் மேசையில் பரப்பி வைத்திருந்தார். மற்றவர், சமயம் பார்த்து முன்மேசையருகில் நின்ற காசாளரான சண்முகநாதனை (நாதன்) மடக்கி, முகம் குப்புறப் படுக்க வைத்து, கைகளைப் பின்பக்கமாக மடித்து 'ஸ்கொட்ச் ரேப்'பினுல் சுற்றிக் கட்டினுர். அங்கு சாமான் வாங்க வந்து நின்ற இந்தியப் பெண்மணி ஒருவரும் இவ்வாறு மடக்கப்பட்டார்.

அதன் பின்னர் நகைக் கடையுள் நின்ற சிவகுமாரையும் (சிவா) இவ்வாறு மடக்கி, கைகளைக் கட்டிப் படுக்க வைத்து விட்டு, நகைகளை அள்ளிக் கொண்டு வெளியேற வியட்நாமிய இளைஞர்கள் முயன்றனர்.

இவ்வேளையில் சிவாவும், நாதனும் தீரத்துடன் மேற்கொண்ட துணிகர நடவடிக்கை இந்தக் கொள்ளை முயற்சியை முறியடித்தது. தங்கள் கைக்கட்டுகளை அறுத்துக் கொண்டு எழும்பிய இரு இளைஞர்களும், தங்களால் முடிந்தவரை கைத்துப்பாக்கியுடன் நின்ற கொள்ளையர்களைத் தாக்கி, அவர்களைக் காயப்படுத்தி, முதலில் கைத்துப்பாக்கிகளைக் கீழே விழச் செய்தனர். பதில் தாக்குதலில் சிவாவும், நாதனும் கூட காயமடைந்தனர். இருப்பினும் அவர்கள் தங்கள் தைரியத்தைக் கைவிடவில்லை.

இவர்களது தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாது போன கொள்ளையர் இருவரும், ஒரு சந்தர்ப்பத்தில் நகைகளைத் திருப்பித் தருவதாகவும் தங்களை விடுவிக்குமாறும் மன்றுடியுள்ளனர்.

அருகிலுள்ள கடைக்காரர்கள் எவரும் சிவாவுக்கும், நாதனுக்கும் உதவிக்கு வரவில்லை. தூர நின்றவர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றனரே தவிர, பொலிஸுக்கு போன் செய்தற்குக் கூட நினைக்கவில்லை.

அச்சமயம் அவ்வழியால் வந்த ஆர்.சி.எம்.பி. பொலிஸார் ஒருவர் நிலைமையைத் தெரிந்து மேலதிக பொலிஸாரை வரவழைத்து கொள்ளையர்களைக் கையும் மெய்யுமாகக் கைது செய்தனர். கைத்துப்பாக்கிகளும் ரவைகளும் கடைக்குள் சிதறுண்ட நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டன. லதம் உயிரைப் பணயம் வைத்து, கொள்ளையரை மடக்கிப் பிடித்த சிவாவும், நாதனும் பொலிஸாரினுல் பாராட்டப் பெற்றனர்.

இதுதான் நடந்து முடிந்த ஒரு மணி நேர 'திகில்' நாடகத்தின் சுருக்கம்.

இந்தச் சம்பவமானது, இங்குள்ள மற்றைய தமிழர் வர்த்தக நிலையங்களுக்கும் ஒரு படிப்பனையாகும். எம்மவர்களின் கடைகள் போதிய பாதுகாப்பின்றி இருப்பது ஒன்று. மற்றையது, பணத்துக்காகக் கொலை செய்வதானது கனடாவில் இன்று அதிகரிக்கத் தொடங்கியிருப்பது. இதனுல் வர்த்தக நிலையங்கள் நடத்தும் தமிழர்கள் தங்களுக்குள் ஒரு கூட்டமைப்பை உருவாக்கி தம்மைத் தாமே பாதுகாக்கும் ஏற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டியது அத்தியாவசியமாகும்.

இங்கு மற்றெரு முக்கிய விடயத்தையும் குறிப்பிட்டுக் கூறுவது எங்கள் கடமையாகும்.

மேற்குறிப்பிட்ட கொள்ளை, கொலை முயற்சிச் சம்பவத்தினை தீரத்துடன் போராடி முறியடித்த சிவாவையும், நாதனையும் எவ்வாறு பாராட்டுவது என்று எமக்குத் தெரியவில்லை. வெறும் வார்த்தைகள் மட்டும் இவர்களின் தீரத்துக்குப் போதுமா?

எம்மவர்கள் அகதிகளாக இங்கு வர நேர்ந்ததாயினும் வீரமும், தீரமும் அவர்களிடமிருந்து அகலவில்லை என்பதற்கு சிவாவும், நாதனும் கனடாவில் உயிர் வாழும் உதாரணங்கள். அன்றைய கொள்ளை முயற்சிச் சம்பவத்தில் இவர்களது உயிருக்கு ஏதாவது நேர்ந்திருந்தால்............! இதனை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

இவ்வாறன தீரமிகு சம்பவத்தை வேறு இனத்தவர் புரிந்திருந்தால், அவர்களைப் பாராட்டி எத்தனையோ விழாக்கள் இங்கு எடுக்கப்பட்டிருக்கும். வெகுஜன தொடர்புச் சாதனங்கள் விளாசித் தள்ளியிருக்கும். பரிசுகள் குவிந்திருக்கும்.

சிவாவும், நாதனும் தமிழர்கள். இதனுல்தானே என்னவோ, அவர்கள் எவராலும் கவனிக்கப்படாதவர்களாகவுள்ளனர். போட்டி போட்டுக் கொண்டு எத்தனையோ தமிழர் சங்கங்களும், தமிழ் நிறுவனங்களும் இங்கு செயற்பட்டு வருகின்றனவே! அவர்களும் கூடவா தூங்குகின்றனர்?

கலைஞர்களையும், எழுத்தாளர்களையும் மட்டுமல்ல - வீரர்களையும் தீரர்களையும் கூட வாழும் போதே நாம் கௌரவிக்கப் பழக வேண்டும்.

எஸ்.திருச்செல்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவை 'முடங்க' வைத்த வேலைநிறுத்தங்களும் முடிவுதெரியாத 'பொறிக்கிடங்கு' இணக்கங்களும்

## A ROUND UP - POSTAL, PUBLIC SERVICE AND TTC STRIKES

கனடாவைப் பொறுத்தளவில் செப்டம்பர் மாதம் மிகவும் முக்கியமான ஒரு மாதமாக அமைந்து விட்டது. இதற்குக் காரணம் இங்கு இடம் பெற்ற வேலை நிறுத்தங்களும், அவற்றை முடிவுக்குக் கொண்டுவர 'பொறிக்கிடங்கு' இணக்கங்கள் மேற்கொள்ளப்பட்டதுமாகும்.

நாடு முழுவதுமுள்ள தபால் இலாகா ஊழியர்களின் மறியல் போராட்டம், ஆர்பாட்ட வீதி ஊர்வலங்கள், வேலை நிறுத்தம் ஆகியவைகளுடன் செப்டம்பர் மாதம் பிறந்தது.

அரசாங்க காசோலையை நம்பி வாழுபவர்களே கனடாவில் பெரும்பான்மையினராதலால் தபால் இலாகா ஊழியர் வேலை நிறுத்தம் உள்நாட்டில் பெரும் கஷ்ட நிலையை உருவாக்கியது தவிர்க்க முடியாததாக அமைந்தது.

Welfare, பென்ஷன், முதியோர் சலுகை என்று அரசாங்க காசோலையை மாதா மாதம் எதிர்பாத்திருப்பவர்களின் திண்டாட்ட வாழ்க்கையை பத்திரிகைகள், ரெலிவிஷன்கள் உட்பட அனைத்து வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் அழகுற வெளியுலகுக்குத் தெரியப்படுத்தியிருந்தன.

இறுதியில் அரசாங்கத்துக்கும் வேலை நிறுத்த தபால் ஊழியர் சங்கத்துக்குமிடையில் பேச்சு வார்த்தை நடத்த மத்தியஸ்தர் ஒருவரை அரசாங்கம் நியமித்ததுடன், நிலைமை சீரடைந்து ஊழியர்கள் நம்பிக்கை எதிர்பார்ப்புடன் வேலைக்குத் திரும்பினர்.

செப்டம்பர் கடைசி வாரம் வரை மத்தியஸ்தப் பேச்சு நல்ல அறிகுறிகளைக் காட்டவில்லை. சுமுக முடிவு காணப்படவில்லையானால் தாங்கள் மீண்டும் வேலை நிறுத்தத்தில் குதிக்க நேருமென தபால் ஊழியர்கள் அச்சமூட்டியுள்ளனர். இந்தப் பயம் காரணமாக ரொறன்ரோ பெரும்பாக சமூக சேவைப் பகுதியினர், அக்டோபர் மாத welfare காசோலைகளை செப்டம்பர் மாதம் 16ம் திகதியே தபாலில் அனுப்பி நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

தபால் ஊழியர்களின் வேலை நிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த அதே சமயம் பார்த்து PSAC என்று அழைக்கப்படும் கனடிய பொதுச் சேவை ஊழியர்களின் சங்கக் கூட்டமைப்பு வேலை நிறுத்தத்தில் குதித்தது. சம்பள உயர்வு இவ்வருடம் நிறுத்தப்பட்டது இவர்களது வேலை நிறுத்தத்துக்கு முக்கிய காரணமாகும்.

சுமார் ஒரு லட்சத்துக்கும் அதிகமான மத்திய அரசாங்க ஊழியர்களைக் கொண்டது மேற்படி கூட்டமைப்பு. இவர்களது வேலை நிறுத்தத்தினால் பெரும்பாலான முக்கிய அரசாங்க அலுவலக வேலைகளும் 'முடங்கிப்' போக நேர்ந்தது. குறிப்பிட்டுச் சொல்வதானால் குடிவரவு, வேலைவாய்ப்பு, வருமான வரி, சுங்கப் பகுதி, கலால் இலாகா ஆகியவைகளின் அன்றாட வேலைகள் ஸ்தம்பித மடைந்தன.

இந்த வேலை நிறுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களில் அகதிகளும், அகதி நிலைக் கோரிக்கையாளர்களும் அநேகமாவர். ஏற்கனவே திகதியிடப்பட்டிருந்த பல நூற்றுக்கணக்கானவர்களின் அகதிநிலை விசாரணைகள் டிசம்பர் மாதம் வரைக்கும் பின்போடப்பட்டுள்ளது. வேலை நிறுத்தம் நடைபெற்ற நாட்களில் லான்டட் பத்திரங்களைப் பெறவிருந்த பலருக்கு அது கிடைக்காமல் போயுள்ளது.

இவர்களின் வேலை நிறுத்தத்தை முறியடிக்க, கட்டாய வேலைச் சட்ட மசோதாவை மல்ரோனியின் மத்திய அரசு பாராளுமன்றத்தில் செப்டம்பர் 16ம்

### உக்கிரன் பார்வையில்

திகதி சமர்ப்பித்தது. லிபரல், NDP கட்சிகள் இதனை வன்மையாக எதிர்த்தன. எந்தச் சட்டமும் தங்களை அடிபணிய வைக்கப் போவதில்லை என்று ஊழியர்கள் அறை கூவினர்.

இறுதியில் 17ம் திகதி, பேச்சு வார்த்தைக்கான வசதிக்காக இரண்டாம் வாசிப்புடன் அரசாங்கம் மசோதாவை நிறுத்தி வைத்துள்ளதாயினும், எப்பொழுதாவது ஊழியர்கள் பயமுறுத்தினால் சட்டம் அமலாக்கப்படும் என்று அரசாங்கம் கூறி வருகின்றது. அதே சமயம் பேச்சுக்களும் தொடர்கின்றது. தாங்கள் ஏமாற்றப்பட்டால் வேலை நிறுத்தம் மீண்டும் ஆரம்பமாகும் என்கிறது ஊழியர் சங்கம்.

மேற்படி அரசாங்க ஊழியர்களின் வேலை நிறுத்தத்தினால் அலுவலகங்கள் ஆட்டம் கண்டு கொண்டிருந்த நேரம் பார்த்து TTC என்றும் கூறப்படும் ரொறன்ரோ போக்குவரத்துக் கமிஷனின் 8500 ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

சகல ரயில்களும், பஸ்களும், ஸ்ரீற் கார்களும் எட்டு நாட்கள் கட்டாய ஓய்வெடுத்துத் தூங்கின. நாள் பார்த்து நடத்தியது போல, செப்டம்பர் 12ம் திகதி ஆரம்பமான இவர்களது வேலை நிறுத்தத்தினால் ரொறன்ரோ பெரும்பாகம் முற்றிலும் முடமானது. அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள் வெறிச்சோடிக் காணப்பட்டன. பாடசாலைகள் மாணவர் வரவின்றிக் காய்ந்தன.

தனியார் வாகனங்களின் பெருக்கத்தினாலும், நெருக்கத்தினாலும் வீதிகள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையை அடைந்தன. துவிச்சக்கர வண்டிகள் வீதிகளையும், நடைபாதைகளையும் ஆக்கிரமிப்புச் செய்தன. TTC வேலை நிறுத்தம் 'ஸ்ரீமான் பொது ஜனத்தை'யே மிக மோசமாகப் பாதித்தது. வீதி விபத்துகள் பல நூறாக அதிகரித்தன.

1990ம் ஆண்டு வரை எதிர்கட்சி வரிசையிலிருந்து, வேலை நிறுத்தங்களைத் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்தி வந்த பொப் ரேயின் NDP அரசு, TTC வேலை நிறுத்தத்தில் சிக்கித் தவித்து செய்வதறியாது முதல் நான்கு நாட்களும் தடுமாறியதால் இந்த வேலைநிறுத்தம் அடுத்த வாரத்துக்கும் செல்ல நேர்ந்தது.

இறுதியாக ஒன்ராறியோ தொழிலமைச்சரின் தலையீட்டினால் முன்வைக்கப்பட்ட புதிய ஒப்பந்தம், ஊழியர் சங்க வாக்கெடுப்புக்கு 19ம் திகதி விடப்பட்டது. 8500 ஊழியரில் 3500 பேர் இதனைப் பகிஷ்கரித்தனர். மிகுதி 5000 பேரில் 3000 பேர் ஆதரித்தனர். 2000 பேர் எதிர்த்தனர்.

மொத்தத்தில் 8500 ஊழியரில், 3000 பேர் மட்டுமே புதிய ஒப்பந்தத்தை ஏற்றனர் என்பதே சரி. இதன் மூலம் 20ம் திகதி ஊழியர்கள் வேலைக்குத் திரும்பினர். ஆனால் பிரச்சனை நிரந்தரமாகத் தீர்ந்ததாகத் தெரியவில்லை.

அடுத்தடுத்து இடம்பெற்ற மூன்று வேலை நிறுத்தங்களும், முற்று முடிவாக தீர்வு காணப்படாத 'பொறிக் கிடங்கு' ஒப்பந்தங்கள்/இணக்கங்கள் மூலம் இடைக்கால தீர்வினைச் சந்தித்துள்ளன.

ஆச்சரியமாகவும், விழிப்பாகவும் நடந்து கொள்வதாக சகல தரப்பினரும் நினைத்துச் செயற்படுகின்றனராயினும், பொறிக்கிடங்குக்குள் முதலில் விழுபவர், மற்றவருக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுப்பது தவிர்க்க முடியாததாகிவிடும்.

இவ்விடயத்தில் பாதிப்புக்குள்ளான "ஸ்ரீமான் பொது ஜனம்" என்ன சொல்கிறார் என்று கேட்போமா?

"கனடாவின் சனத்தொகையில் அரைவாசிப் பேர் வேலைநிறுத்தம் செய்கின்றனர். மிகுதி அரைவாசிப் பேரும் வேலையில்லாது Unemployment Insuranceல் இருக்கின்றனர்".

ஓரளவுக்கு இது உண்மைதான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேக்கநிலை அகதிக் கோரிக்கையாளரின் வேலை அனுமதிப்பத்திரங்கள் கால நீடிப்பு

## BACKLOG - WORK PERMIT EXTENSION

Backlog எனப்படும் தேக்கநிலையிலுள்ள அகதிநிலைக் கோரிக்கையாளர்களில் பெருந்தொகையானவர்களின் வேலை அனுமதி (work permit) பாடசாலை அனுமதி (student authorization) பத்திரங்கள் செப்டம்பர் மாதம் 30ம் திகதியுடன் காலவதியாகி விட்டது. முன்னர்போல இம்முறை இவர்களுக்கு புதிய வேலை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.

தேக்கநிலை அகதிகளின் கோரிக்கைகளை மிஸிஸாக, டேவிஸ்வில் ஆகிய இடங்களிலுள்ள பிரத்தியேக குடிவரவு அலுவலகங்கள் கவனித்து வருகின்றன. இந்த இரண்டு அலுவலகங்களும் வேலை அனுமதி, பாடசாலை அனுமதிப்பத்திரங்களுக்கான கால நீடிப்புக் கடிதங்களை தற்போது தபாலில் அனுப்பிவருகின்றன.

தேக்கநிலையில் அகதிநிலைக் கோரிக்கையாளர்களாகவிருக்கும் ஒவ்வொருவருக்கும் மேற்படி கடிதம் தனித்தனியாக தபாலில் அனுப்பப்படுவதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். குடும்ப விண்ணப்பங்களைப் பொறுத்தளவில் பிரதான குடியிருப்பாளரின் பெயருக்கே மேற்படி கால நீடிப்புக் கடிதம் அனுப்பப்படுவதாகவும், குடும்பத்தின் ஒவ்வொருவருக்கும் இந்தக் கடிதம் பொருந்தும் என்றும் டேவிஸ்வில் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தேக்க நிலையில் சுமார் 50,000க்கு அதிகமான விண்ணப்பங்கள் இருப்பதால், அனைவரது கால நீடிப்புக் கடிதங்களும் உடனடியாக அனுப்பப்படும் என்று உத்தரவாதமளிக்க முடியாத நிலையில் அதிகாரிகள் இருக்கின்றனர். அநேகமாக அக்டோபர் மாதம் முற்பகுதிக்குள் அனைவரது கடிதங்களும் அனுப்பி முடிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

எவருக்காவது, ஏதாவது காரணத்தினால் (புதிய வேலைக்குச் செல்வதற்கு அல்லது புதிய பாடசாலைக்குச் செல்வதற்கு அல்லது வேலை வழங்குபவர் கால நீடிப்புக் கடிதத்தைச் சமர்ப்பிக்குமாறு நிர்ப்பந்தித்தால்) மேற்படி கடிதம் உடனடியாகத் தேவைப்படுமிடத்து, தமது பைல் உள்ள தேக்க நிலை அலுவலகத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தங்கள் பெயரையும், பைல் இலக்கத்தையும் அதிகாரிகளிடம் தெரிவித்தால், அவர்கள் கடிதத்தை உடனடியாக அனுப்பிவைக்க நடவடிக்கை எடுப்பர்.

மிஸிஸாக அலுவலகத்துடன் 277-6282 என்ற தொலைபேசி இலக்கத்திலும், டேவிஸ்வில் அலுவலகத்துடன் 973-1244 என்ற இலக்கத்திலும் தொடர்பு கொள்ள முடியும். டேவிஸ்வில் அலுவலகத்துக்கு நேரில் சென்று, அதற்கெனவுள்ள பத்திரத்தைப் பெற்று பூர்த்தி செய்தும் கொடுக்கலாம். ஆனால் இது கட்டாயம் என்றில்லை.

மிஸிஸாக அலுவலகம் வழங்கும் வேலை நீடிப்புக் கடிதத்தில், "சம்பந்தப்பட்டவர் வேலை செய்வதற்கான கால நீடிப்பு 1993 டிசம்பர் 31ம் திகதி வரை அல்லது அவரது விசாரணை முடிவடைந்து தீர்ப்புத் தெரிவிக்கும் வரை (இதில் எது முதல் நடைபெறுகிறதோ அதுவரையும்) என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

டேவிஸ்வில் அலுவலகம் வழங்கும் கால நீடிப்புக் கடிதத்தில், "சம்பந்தப்பட்டவரின் விசாரணை முடிவடையும் வரை அவர் வேலை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மிஸிஸாக தமிழ்ப் பாடசாலை - புதுவருட வகுப்புகள்

## MISSISSAUGA TAMIL SCHOOL - HERITAGE CLASSES

மிஸிஸாக 3520 குயின்ஸ்ரன் ட்றைவிலுள்ள மிஸிஸாக தமிழ்ப் பாடசாலையின் 1991-92 ஆண்டுக்கான வகுப்புகள் செப்டம்பர் மாதம் 21ம் திகதி ஆரம்பமாகியுள்ளது. பீல் கல்விச் சபையின் தாய்மொழிப் பிரிவு இவ் வகுப்புகளை நடத்துகின்றது.

ஒன்ராறியோ மாநிலத்தில் எந்தப் பாடசாலையிலும் கல்வி கற்கும் மாணவரும் இந்த வகுப்புகளில் பதிவு செய்து கல்வி கற்க முடியும். பாலர் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரையான மாணவர்களுக்கு ஆரம்ப, மத்திய வகுப்புகளும், ஒன்பதாம் வகுப்புக்கு மேலுள்ள மாணவர்களுக்கு உயர்தர வகுப்புகளும் நடத்தப்படுகின்றது.

தாய்மொழியுடன் பண்புமிக்க தமிழர் கலாசாரத்தையும், சமூக உணர்வுடன் கூடிய சகோதர மனப்பான்மையையும், நட்புறவையும் எதிர்காலச் சமூகத்துக்கு ஊட்டுவதற்கு உதவியாக மிஸிஸாக தமிழ்ப் பாடசாலை இயங்கி வருகின்றது.

தமிழைப் புதிதாகப் பயிலும் மாணவர்களுக்கும், அதேசமயம் நன்கு தமிழ் தெரிந்த மாணவர்களுக்கும் இப்பாடசாலை பயனளிக்கும் ஒரு நிலையமாக அமைந்துள்ளது. அத்துடன் பல பாடசாலைகளிலும் கல்வி கற்கும் தமிழ் மாணவர்கள் வாரத்தில் ஒரு தடவை ஒன்று சேரும் சந்தர்ப்பமும் இதனால் ஏற்படுகின்றது.

பாடசாலையில் அனுமதி பெறுவதற்கும் மேலதிக விபரங்களுக்கும் 848-3925 அல்லது 855-3783 ஆகிய தொலைபேசி இலக்கங்களில் ஆசிரியர்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

Brampton தமிழ்ப்பாடசாலையின் தாய்மொழி வகுப்புகள் North Park Secondary School ல் ஞாயிற்றுக் கிழமைகளில் காலை பத்து மணி தொடக்கம், பகல் 12:30 மணி வரை நடைபெறுகின்றது. மேலதிக விபரங்களுக்கு 456-0150 இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

# நீதிபதி வி.பி.சுந்தரலிங்கம் கனடாவில் காலமானார்

இலங்கை நீதிபரிபாலன சேவையில் குறுகிய காலத்தில் அடுத்தடுத்துப் பல பதவி உயர்வுகளைப் பெற்று நீதவானாகவும் முதலாம் தர மாவட்ட நீதிபதியாகவும் பணியாற்றிய திரு.வி.பி.சுந்தரலிங்கம் 1991 ஆகஸ்ட் 11ம் திகதி கனடாவில் ஸ்காபுரோவில் மாரடைப்பினால் காலமானார்.

வடமராட்சி, அல்வாய் மேற்கு திக்கத்தில் மலாயன் பென்சனியர் வேலாயுதர் பெரியதம்பியினதும் சின்னப்பிள்ளையினதும் மகனாக 1934ம் ஆண்டு பிறந்த இவர், 1964ம் ஆண்டு சட்டத்தரணியானார். 1971ல் பருத்தித்துறை பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரியாகி, 1976ல் கொழும்பு பதில் நீதவானாகி, 1977ல் கொழும்பு மாநகரக நீதவானாகி, பின்னர் மாவட்ட நீதிபதியாகப் பதவி உயர்வு பெற்றார்.



பருத்தித்துறை, முல்லைத்தீவு, திருமலை, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம் ஆகிய தமிழீழத்தின் பிரதான நீதிமன்றங்களில் நீதவானாகவும், மாவட்ட நீதிபதியாகவும் கடமையாற்றியவர் திரு.வி.பி.சுந்தரலிங்கம்.

நல்லூரைச் சேர்ந்த ஆசிரியை தவமணி அவர்களை 1967ம் ஆண்டு திருமணம் செய்த திரு.சுந்தரலிங்கம் அவர்களுக்கு சுதர்ஷன, சுதாகர், சுதேஷ், சுரவின் என்று நான்கு புதல்வர்கள் உண்டு. முதலிரு புதல்வர்களும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் கலவி பயின்ற வேளையில் கல்வியுடன் கிரிக்கெட் விளையாட்டிலும் புகழ் பெற்று விளங்கினர். இவர்கள் அனைவரும் தற்போது ஸ்காபுரோவில் கல்வி பயின்று வருகின்றனர்.

திரு.சுந்தரலிங்கம் அவர்கள் 1989ம் ஆண்டு மே மாதம் 1ம் திகதி Fiji தீவின் Resident Magistrate ஆக நியமனம் பெற்று, அப்பதவியை இறக்கும் வரை வகித்து வந்தார். Fiji பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் இவர் கடந்த ஆண்டு கலாநிதிப் பட்டம் பெற்றார்.

இரண்டு வார விடுமுறையில் தமது மனைவி, பிள்ளைகளைப் பார்ப்பதற்காக Fijiயிலிருந்து கடந்த மாதம் 9ம் திகதி ரொறன்ரோ வந்த இவர், 11ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணியள வில் வீட்டில் இருக்கும் போது திடீரென ஏற்பட்ட மாரடைப்பினால் காலமானார்.

யோகசுவாமிகளின் சிஷ்யரும் சாயி பக்தருமான திரு.சுந்தரலிங்கம், பல்வேறு சமய, சமூக நிறுவனங்களில் முன்னின்று பணிபுரிந்துள்ளார். இவரது இறுதிச் சடங்குகள் ஸ்காபுரே Ogden Funeral Homeல் நடைபெற்றது. திருவாளர்கள் ஜிம்மி ராஜரட்ணம், எஸ்.திருச்செல்வம் ஆகியோர் இங்கு அஞ்சலியுரை நிகழ்த்தினர். பெருந்தொகையான நண்பர்கள், உறவினர்கள் இறுதிச் சடங்கில் பங்குபற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநல உதவிப் பணம் பெற அடிப்படையான தகுதிகள் யாவை? அகதிகளுக்கு மட்டுமே என்றில்லை!

## GENERAL WELFARE ASSISTANCE - ELIGIBILITY CRITERIA

உலகில் அகதிகளை ஏற்றுக் கொள்ளும் நாடுகளில் மிக முக்கியமான ஒன்றுக கனடா திகழுகின்றது. பல ஐரோப்பிய நாடுகளும் அகதிகளை ஏற்று, அங்கு குடியேற அனுமதியளித்துள்ளனவாயினும் அங்கிருக்கும் அகதிகள், வருடங்கள் பலவாகியும் அந்தஸ்து (Status) எதுவுமில்லாமல் வாழ்க்கை நடத்துகின்றனர்.

இந்த வகையில் பார்க்கும் போது கனடாவுக்கு வந்து அகதி அந்தஸ்து கோரியவர்களை ஓரளவுக்கு அதிர்ஷ்டசாலிகள் என்றே கூறவேண்டும். தேக்கநிலை என்று கூறப்படும் Backlog பிரிவுக்குள் அகப்பட்டுள்ளவர்களைத் தவிர, மற்றையவர்களுள் அநேகமானவர்களும் முதல் மூன்று வருடங்களுக்குள் (இது ஆகக் கூடிய காலம்) நிரந்தர குடியுரிமை (landed Immigrant) அந்தஸ்தைப் பெற்று விடுகின்றனர்.

அதே போல அதற்கு அடுத்த மூன்ருண்டு காலத்துக்குள் இவர்கள் கனடிய பிரஜாவுரிமை (Citizenship) யையும் பெற்று விடுகின்றனர்.

கனடிய அரசாங்கத்தின் மாநகராட்சி நிர்வாகம், இங்குவரும் அகதிகளுக்கு வழங்கும் உடனடி உதவிகளில் Welfare என்று பொதுவாகக் கூறப்படும் பொது நல உதவிப் பணம் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. ஒன்ராறியோ மாநிலத்தின் நிர்வாகமே (Metropoliton Toronto) மிகக் கூடுதலான பணத்தை welfareக்குச் செலவு செய்கின்றது.

Welfare எனப்படும் மாதாந்த நிதியுதவிப் பணம் அகதிகளுக்கு மட்டும் தான் வழங்கப்படுகின்றது என்ற தப்பான ஒரு அபிப்பிராயம் கனடிய பெரும்பான்மை மக்களிடையே நிலவி வருகின்றது. இது முற்றிலும் தவருகும். கனடிய நிரந்தர வசிப்பிட உரிமை பெற்றவர்கள், கனடிய பிரஜைகள் கூட இந்த welfare பணத்தைப் பெற முடியும். அவ்வாறு ஆயிரக் கணக்காஞேர் இப்போது பெற்றும் வருகின்றனர்.

உதாரணமாக, வேலையிழந்த ஒருவர், அவர் அகதிநிலைக் கோரிக்கையாளராகவிருந்தாலும் சரி, கனடிய பிரஜையாகவிருந்தாலும் சரி, தமது வேலையற்ற கால காப்புறுதிப் பணத்தைப் (Unemployment Insurance) பெற எவ்வாறு உரித்துடையவரோ, அவ்வாறே அகதிநிலைக் கோரிக்கையாளரிலிருந்து, கனடிய பிரஜையான ஒவ்வொருவரும், தங்கள் ஜீவஞேபாயத்திற்கு வருமானமில்லை என்பதை நிரூபிக்கும் சந்தர்ப்பத்தில் அவர்கள் welfare பணத்தைப்பெற உரித்துடையவராகின்றனர்.

வேலையற்றகால காப்புறுதியில் பணத்தைப் பெற்று வரும் ஒருவர், குறிப்பிட்ட ஒரு காலத்தின் பின்னர் அதனைப் பெற முடியாதவராகின்ருர். அச் சந்தர்ப்பத்தில் உண்மையாகவே புதிய வேலை எதனையும் பெற முடியாத நிலை ஏற்படுமாஞல் அவர் welfare பணத்துக்கு விண்ணப்பித்து அதனைப் பெற முடியும். அகதிகள் மட்டும் தான் welfare பெற முடியும் என்பதில்லை.

அதேபோல, வேலையிழந்த காலத்துக்கும், வேலையற்ற காப்புறுதிப் பணம் பெறுவதற்கான காலத்துக்கும் இடைப்பட்ட ஒரு மாதம் அல்லது இரண்டு மாதமாகிய காலப் பகுதியிலும் welfareக்கு விண்ணப்பிக்க முடியும்.

ஏற்கனவே welfareல் இருந்த சிலர் Co-op Program, Future Program போன்ற தொழிற் பயிற்சிகளுக்குச் சேர்த்துக் கொள்ளப்படும் போது அவர்களுக்கு welfare நிறுத்தப்படுகின்றது. இதற்குக் காரணம் அவர்களுக்குப் பயிற்சிக் காலத்தில், மணித்தியால வேதன அடிப்படையில் அலவன்ஸ் பணம் வழங்கப்படுவதாகும். இந்தப் பணம் இரண்டு வாரத்துக்கு ஒரு தடவை என்ற வீதம், மாதம் இரு தடவை வழங்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட பயிற்சியை முடித்த பின்னர் அவர்கள் எங்காவது வேலைக்குச் செல்ல வேண்டும் என்றே பொதுவாக எதிர்பார்க்கப்படுகின்றது. ஆஞல் தற்போதிருக்கும் பொருளாதார மந்த நிலை

றஞ்சி

காரணமாக அநேகமானவர்களால் உடனடியாக வேலையைப் பெற முடிவதில்லை. அதே சமயம், மேற்குறிப்பிட்ட பயிற்சிக் காலத்தில் இவர்களுக்கு வேதனமாக வழங்கப்பட்ட பணத்தில் வேலையற்ற காப்புறுதிப் பணம் (Unemployment Insurance) கழிக்கப்பட்டுள்ளதால், இவர்கள் பயிற்சியை முடித்த பின்னர் வேலையிழந்தவர்களாகக் கருதப்பட்டு Unemployment Insuranceக்கு விண்ணப்பம் செய்யவும் இடமுண்டு.

இச்சமயத்தில் ஒரு பிரச்சனையை இவர்கள் எதிர்கொள்ள நேரிடலாம். Unemployment Insurance பணம் பெறுவதாஞல், முன்னைய 52 வாரங்களுக்குள் ஆகக்குறைந்தது இருபது வாரங்கள் வேலை செய்திருக்க வேண்டும். அதே சமயம் வாரத்துக்கு ஆகக் குறைந்தது பதினைந்து மணித்தியாலயங்கள் அல்லது *$136* டாலர்கள் வருமானமாகப் பெற்றிருக்க வேண்டும்.

சில வேளைகளில், Future அல்லது Co-op Programல் பயிற்சியை முடித்தவர்கள் மேற்தெரிவிக்கப்பட்டவைகளில் ஏதாவதொன்றின் காரணமாக Unemployment Insurance ஐப் பெற அருகதையற்றவர்களாகலாம். இவர்கள் உடனடியாக தமது பகுதி welfare அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தமக்கான welfare பணத்தைப் பெற முடியும்.

நிரந்தரத் தொழில் இல்லாதவர்கள், தன்னையோ, தன்னில் தங்கியிருப்பவர்களையோ வருமானமின்மையால் பராமரிக்க முடியாதிருப்பவர்கள், குறுகிய அல்லது நீண்ட கால நோய் காரணமாக வேலை செய்ய முடியாதிருப்பவர்கள், வயது முதிர்ந்தோர், சுவீகாரப் பிள்ளைகள், வயது, வேலையின்மை போன்ற குறிப்பிட்ட சில காரணிகளை நிரூபிக்கும் பாடசாலைக்குச் செல்லும் மாணவர், வேலைக்குச் செல்லும் அதே வேளையில் தொழிற் பயிற்சிக்கும் செல்லும் சிலர் (பகுதி நேர வேலையுடன்) ஆகியோர் welfare பணத்துக்கு விண்ணப்பம் செய்யத் தகுதியுடையவர்கள்.

இவ்வருடத்தின் ஜுலை மாதத்தில் *88,450* விண்ணப்பங்களுக்கு றொறன்ரோ பெரும்பாகப் பிரதேசத்தில் welfare பணம் வழங்கப்பட்டுள்ளது. இதில் *22,600* விண்ணப்பங்கள் மட்டுமே அகதிகளுடையது என்பது கவனிக்கப்பட வேண்டியது. (இங்கு விண்ணப்பம் என்று குறிப்பிடுவது one application என்று பொருள்படும். ஒரு விண்ணப்பத்தில் *3* அல்லது *4* பேர் கூட அடங்குவர்)

Unemployment Insurance பணம் பெறப்பட்டு, அதற்கான காலம் முடிவடைந்த பின்னர் welfare பணம் பெறுபவர்கள் தொகை *27,000* ஆகும்.

மேற்தெரிவிக்கப்பட்ட புள்ளி விபரத்தைப் பார்க்கும் போது மொத்தம் *88,450* விண்ணப்பங்களில் நான்கில் ஒரு பங்கு (கால்வாசி) தொகையினர் மட்டுமே அகதி நிலைக் கோரிக்கையாளர்கள் என்பது தெரிய வருகின்றது. எனவே, அகதிகளுக்கு மட்டும் தான் அல்லது அகதிகளுக்குத்தான் பெரும் தொகை welfare பணம் வழங்கப்படுகின்றது என்றும், கனடியர்களின் வரிப்பணம் அநியாயமாக அகதிகளுக்குச் செலவு செய்யப்படுகின்றது என்றும் சிலர் எழுப்பும் கோஷம் பொய்யாகின்றது.

Welfare பணத்துக்காக விண்ணப்பம் செய்யும் அகதிநிலைக் கோரிக்கையாளர்கள் இப்போது இரண்டு வகையாக பிரிக்கப்பட்டுள்ளனர்.

Welfare பணத்துக்கு விண்ணப்பம் செய்யும் அகதி நிலைக் கோரிக்கையாளர்கள் தங்களுடன் சில முக்கியமான ஆவணங்களை (Documents) வைத்திருந்தால் மட்டுமே அவர்களின் விண்ணப்பம் ஏற்கப்படும்.

அடுத்த கட்டுரையில் இவை தொடர்பான விபரங்களை விபரமாகக் கவனிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்ராறியோ வீடமைப்புக் கூட்டுத்தாபனத்தின் வீடுகளுக்கு விண்ணப்பம் செய்வது எவ்வாறு?

## ONTARIO HOUSING CORPORATION - CRITERIA FOR SELECTION

**இளவாலை எஸ். ஜெகதீசன்**

குறைந்த வாடகையில் வீடொன்று கிடைக்க வேண்டும் என ஏங்குகின்றீர்களா?

உங்கள் கனவுகள் வானத்திலும், கால்கள் சகதியிலுமாய் ஒரு முரண்பட்ட வாழ்க்கையில், வாடகை இதுவரை முடமாக்குவதாக உணர்கிறீர்களா?

ஒன்ராறியோ வீடமைப்பு கூட்டுத்தாபனமும் (Ontario Housing Corporation) ரொறன்ரோ பெரும்பாக வீடமைப்பு அதிகார சபையும் (Metro Tronto Housing Authority) மிகவும் குறைந்த வாடகைக்கு வீடுகளையும் தொடர் மாடிகளையும் வழங்குகின்றன.

இதுவரையில் வீடு கிடைத்த பலர், தமது தலைக்கு மேல் உள்ள கூரை வெறும் அத்திபாரத்தில் மட்டும் நிற்கவில்லை; ஆதரவினால் நிற்கின்றது எனப் பெருமிதம் கொள்ளுகின்றனர்.

இது வரையில் வீடு கிடைத்த சிலர், தமது வீட்டுத் தளபாடங்கள் வெறும் கால்களால் மட்டும் நிற்கவில்லை; கருணையினால் நிற்கின்றது என புளகாங்கிதம் அடைகின்றனர்.

பிரஜாவுரிமை பெற்றவர்களுக்கும், நிரந்தர வசிப்பிட உரிமை பெற்றவர்களுக்கும் மட்டுமே அண்மைக் காலம் வரை திறந்து விடப்பட்டிருந்த அவற்றின் கதவுகள், அகதிநிலை கோருபவர்களுக்கும், அதற்கு அங்கீகாரம் பெற்றவர்களுக்கும் தற்பொழுது அகலமாகத் திறந்து விடப்பட்டுள்ளது.

இதன்படி கனடாவில் குடியேறியவர்கள் எவருமே தாம் கனடா வந்த சிலநாட்களில் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும் பொழுது அத்தியாவசிய தேவைக்கும், அவசர தேவைக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படும். ஏனையவை waiting list எனும் நிலையைச் சென்றடையும்.

விண்ணப்பங்கள் புள்ளி அடிப்படையில் தரம் பிரிக்கப்பட்டு வீடுகள் விநியோகிக்கப்படும்.

அதிக வாடகை கொடுக்கும் அநியாயம் இதனால் கட்டுப்படுத்தப்படுகின்றது.

ஒரு அறைக்கு இருவர் என இடவசதி செய்யப்படுவதால் சுதந்திரமும் சுகாதாரமும் பேணப்படுகின்றது.

வேலை இழப்பைச் சந்திக்க நேரிடினும் வாடகையும் குறைவு பெறுகின்றது.

உடலின் முதிர்ச்சி, உள்ளத்தின் தளர்ச்சி உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டாலும், குடும்பங்கள், தனியாட்கள், குழந்தைகள், அபலைகள், பிளவுபட்ட குடும்பங்கள் எனச் சகல தரப்பினருக்கும் இச்சலுகை, சந்தர்ப்பம் அளிக்கின்றது.

மாதா மாதம் கிடைக்கும் மொத்த வருமானத்தின் கால் பங்கு மட்டுமே வாடகையாக அறவிடப்படுகின்றது.

வருமானம் அதிகரிக்க அதிகரிக்க, வாடகையும் அதன் கால்பங்காக அதிகரிக்கும். வருவாய் குன்றக் குன்ற வாடகையும் அதன் காற்பங்காகக் குன்றும்.

எண்ணிக்கை அதிகம் உடைய குடும்பங்களுக்கு எண்ணிக்கை அதிகம் கொண்ட அறைகள் கொண்ட வீடு கிடைக்கும். குடும்ப மொத்த வருமானத்தின் கால் வாசிதான் அப்பொழுதும் வாடகை.

ஆக எப்பவுமே மொத்த வருமானத்தில் கால்பங்கே வாடகையாகும்!

விண்ணப்பதாரியின் 'தேவை'யின் அடிப்படையில் அதற்கு முன்னுரிமை வழங்கப்படும். இதற்கெனப் புள்ளிகள் வழங்கும் நடைமுறை உண்டு.

முதலில் வருமானம் (Income) கவனிக்கப்பட்டு, அதற்கு ஆகக் கூடுதலாக நூறு (100) புள்ளிகள் வழங்கப்படும்.

இரண்டாவதாக, தற்போது குடியிருக்கும் வீட்டுக்கு அவர்கள் வழங்கும் வாடகை கவனத்திற்கு எடுக்கப்படும். தங்கள் வருமானத்தில் முப்பது வீதத்துக்குக் குறைவான தொகையை வாடகையாகச் செலுத்துபவர்களுக்கு புள்ளிகள் கிடையாது. தங்கள் மாத வருமானத்தில் ஐம்பந்தைந்து வீதத்துக்கு மேலான தொகையை வாடகையாகச் செலுத்துபவர்களுக்கு முப்பது புள்ளிகள் கிடைக்கும்.

மூன்றாவதாக, குறைந்த அறையுள்ள வீட்டில் கூடுதலானவர்கள் வசித்து வந்தால் அதற்கும் சிறப்புப் புள்ளிகள் உண்டு. உதாரணமாக, ஒரு படுக்கை அறையை இரண்டு பேருக்கு மேல் பயன்படுத்தினால், ஆணும் பெண்ணுமான இரு சகோதரர்கள் ஒரே அறையைப் பயன்படுத்தினால், தனியான பெற்றார் தனது பிள்ளையுடன் ஒரு அறையைப் பயன்படுத்தினால், அதற்கு முப்பது புள்ளிகள் வழங்கப்படும்.

மாநகர சபையின் அல்லது தரும நம்பிக்கைச் சொத்து நிறுவனமொன்றின் குடியிருப்புப் பகுதியில் தற்காலிகமாகத் தங்கியிருப்பவர்களுக்கு முப்பத்தைந்து புள்ளிகள் கிடைக்கும்.

தற்போது தங்கியிருக்கும் வீட்டிலிருந்து வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டுள்ளவர்களுக்கு ஐந்து புள்ளிகள் வழங்கப்படும்.

சமையலறை, படுக்கையறை, காற்றோட்டம், சுகாதாரக் குறைவு போன்றவைகளுடனான வீடுகளில் வசிப்பவர்களின் விண்ணப்பங்களுக்கு முப்பத்தைந்து புள்ளிகள் உண்டு.

மேற்சொன்னவாறான அடிப்படைகளின் பேரில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பதைத் தெரிந்து வைத்திருப்பது நல்லது.

**பணி புரிய வந்ததில்லை.. பாதுகாக்க வந்தது! சேவை செய்ய வந்ததில்லை.... சேவிக்க வந்தது!!**

இத்திட்டம் பற்றிய பலரது அபிப்பிராயம் இது!

உங்களது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு வீடும் ஒதுக்கப்பட்டு விட்டதா?

உடனடியாக அதனை ஏற்றுக் கொள்ளத் தேவையில்லை.

ஊரோடு கோபித்துக் கொண்டு ஒதுங்கி நிற்கும் வீடாக அது தோன்றலாம்.

உங்களது கலாரசனைக்கு ஒத்துப் போகாத வீடாக அது காட்சி தரலாம்.

வேறு ஏதாவது காரணங்கள் மனத்தில் பயத்தை விதைத்திருக்கலாம்.

இவற்றால் அந்த வீட்டை ஏற்க மறுக்கும் உரிமை உங்களுக்குண்டு.

இதன் பின்னரும் வேறு வேறு இடங்களில் மேலும் இரு தடவைகள் சந்தர்ப்பம் அளிக்கப்படும். மூன்று இடங்களுமே பிடிக்காதுவிடின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு மீண்டும் புதிதாக விண்ணப்பிக்க வேண்டும்.

ரொறன்ரோ பெரும்பாகத்தில் மட்டும் 33,000 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இதற்கென 110 திட்டங்கள் செயற்படுகின்றன. இதுவரை 125,000 பேருக்கு வீடுகள் கிடைத்துள்ளன.

இந்த வருடம் யூன் மாதம் இறுதி வரை 9,500 பேர் விண்ணப்பித்து விட்டுக் காத்திருக்கின்றனர். ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பதாரிகள் 12 பேருக்கு தினசரி வீடுகள் வழங்கப்படுகின்றன.

சிறிய வருமானத்துடன் பெரிய வாடகையைச் செலுத்தத் திணறுகின்றீர்களா?

ஒரு படுக்கையறையில் இரண்டு பேருக்கு மேல் அநாவசியமாக அடைபட்டு அல்லல்படுகின்றீர்களா?

சூழலின் சீர்கேட்டால் சுகாதாரம் பாதிப்படைகின்றதா?

தவறுகளை சுட்டிக் காட்டியபடியே அவகாசம் தந்து ஆறுதலாக காலி பண்ணச் செய்கின்றாரா வீட்டின் சொந்தக்காரர்? அல்லது தட்டிக் கேட்கும் உரிமையைத் தன் வசமாக்கி அகலுமாறு அவகாசமின்றி விரட்டுகின்றாரா?

குறைந்த வாடகை வீடுகளுக்கு உடனடியாகவே விண்ணப்பிக்கலாமே?

உங்களது விண்ணப்பம் waiting listல் அமுங்கிடுமோ? அல்லது விரைவிலேயே வீடு கிடைக்குமோ?

யாருடன் தொடர்பு கொள்வது என்ற நியாயமான சந்தேகத்தைப் பூர்த்தி செய்யவென்றே இருக்கவே இருக்கின்றது தொலைபேசிப் புத்தகத்தின் நீலப் பக்கங்கள். அதனைப் புரட்டி 'Housing'ஐ பாருங்களேன்!!!

உங்கள் பாதங்கள் படுவதற்காக வீடமைப்பு அலுவலகங்களின் பாதைகள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தினு அம்மையாரின் சைவப் பணியிளே பாராட்டி 'சிவயோக மணி' பட்டம் வழங்கிக் கௌரவம்



இலங்கையில் பலவருடங்கள் கல்விப் பணிப்பாளரகப் பணியாற்றிய பின்னர், தற்போது கனடாவில் வசித்து வரும் திருமதி. இரத்தினு நவரத்தினம் அவர்கள் தமிழுக்கும் சைவத்துக்கும் ஆற்றிவரும் பணிகளேப் பாராட்டும் வைபவமொன்றை றிச்மன்ட்ஹில் இந்து ஆலய சபை அண்மையில் நடத்தியது. இவ் வைபவத்தில் 'சிவயோக மணி' என்ற கௌரவப் பட்டம் திருமதி. இரத்தினு நவரத்தினம் அவர்களுக்கு வழங்கப் பெற்றது. தமக்கு வழங்கப்பெற்ற கௌரவத்துக்கு நன்றி தெரிவித்து திருமதி இரத்தினு அவர்கள் உரையாற்றுவதையும், தம்மால் எழுதி வெளியிடப்பெற்ற சைவசமய நூல்களின் ஒரு தொகுதியை மேற்படி ஆலய அறங் காவலர் சபைத் தலேவர் திரு. நா. சிவலிங்கம் அவர்களிடம் அவர் கையளிப்பதையும் மேலுள்ள படங்களில் காணலாம். ஆலய அறங்காவலர் சபைப் பொருளாளர் திரு. வெங்கட்ராமன், செயலாளர் திரு. கிருஷ்ணன் ஆகியோர் நடுவில் காணப்படுகின்றனர்.

# 'ஹெல்த் கார்ட்' கிடைக்கவில்லேயென்றுலும் கூட சிகிச்சை பெறுவதற்கு எந்தத் தடையுமில்லே

## DON'T WORRY IF YOU DO NOT HAVE A HEALTH CARD

'ஹெல்த் கார்ட்' சம்பந்தமான கட்டுரையொன்று கடந்த மாத தமிழர் தகவல் இதழில் வெளியாகியிருந்தது. ஒன்ராறியோவில் புதிதாக அமலுக்கு வந்திருக்கும் சுகாதார திட்டத்தின் கீழ் ஒவ்வொருவரும் தமக்கான ஹெல்த் கார்ட் வைத்திருக்க வேண்டியது அவசியமாகும்.

'ஹெல்த் கார்ட்' இதுவரை பெருத பலருக்கு சிகிச்சையளிக்க சில டாக்டர்கள் (அரசாங்க ஆஸ்பத்திரிகள் தவிர்ந்த) மறுப்புத் தெரிவித்துள்ள சம்பவங்களும் நிகழ்ந்ததுண்டு. அப்படியாளுல் அவசர சிகிச்சைக்குட்படுத்தப்பட வேண்டியிருக்கும், 'ஹெல்த் கார்ட்' இல்லாத நோயாளிகளின் நிலே என்ன? இவர்களுக்கு சிகிச்சையளிக்க டாக்டர்கள் மறுக்க முடியுமா? சிகிச்சையளிக்கப்படும் பட்சத்தில் டாக்டர்களின் சிகிச்சைக் கட்டணத்தைச் செலுத்த வேண்டியது யார்?

இவைகளுக்கான விளக்கம் தரும் சுற்று நிருபமொன்று சுகாதார அமைச்சிளுல் வெளியிடப்பெற்றுள்ளது. அமைச்சின் சுகாதார காப்புறுதித் திட்டப் பிரிவின் நிறைவேற்று இயக்குனரான டாக்டர் ருெபர்ட் எச்.மக்மில்லன் பின்வருமாறு அந்தச் சுற்று நிருபத்தில் தெரிவிக்கின்ருர். அதன் தமிழாக்கம் வருமாறு:-

"உங்களிடம் ஹெல்த் கார்ட் இல்லேயென்ருல் அதனேயிட்டு நீங்கள் கவலேயடைத் தேவையில்லே. இப்போதும், பணம் எதுவும் செலவு செய்யாமல் டாக்டரிடமோ ஆஸ்பத்திரிக்கோ நீங்கள் செல்ல முடியும்.

உங்களுக்கான ஹெல்த் கார்ட்டுக்கு நீங்கள் விண்ணப்பம் செய்யவேண்டும். நேரில் சென்று, கியூவில் நின்று, விண்ணப்பத்தைக் கையளித்தால் தற்காலிக ஹெல்த் கார்ட் உங்களுக்கு வழங்கப்படும். இதனேப் பெறுவதற்கு, கனடாவில் பிறந்ததற்கான பிறப்புச் சாட்சிப் பத்திரம் (Canadian Birth Certificate) அல்லது பிரஜாவுரிமை பத்திரம் (Citizenship Certificate) ஆகியவைகளில் ஏதாவது ஒன்றை நீங்கள் வைத்திருக்க வேண்டும்.

இவைகள் இல்லாதவர்கள் குடிவரவுத் திணைக்களத்திளுல் தங்களுக்கு வழங்கப்பட்ட பத்திரங்களே (Immigration papers) வைத்திருக்க வேண்டும்.

நேரில் சென்று கியூவில் நிற்க முடியாதவர்களுக்கு இரண்டு மாற்று ஏற்பாடுகள் உண்டு.

- விண்ணப்பப் பத்திரத்தை பூரணமாக நிரப்பி, தேவையான ஆவணங்களுடன் அவற்றைக் கையளித்து விட்டுச் செல்லலாம்.

- அல்லது விண்ணப்பப் பத்திரத்தை வீட்டுக்கு எடுத்துச் சென்று பூர்த்தி செய்து, தேவையான பத்திரங்களுடன் சேர்த்து அதனைத் தபாலில் அனுப்பி வைக்கலாம்.

மேற்கூறப்பட்ட இரண்டு வழிகளில் எவ்வகையாகச் செய்தாலும், உங்களுக்கான ஹெல்த் கார்ட் எட்டு வாரங்களுக்கும் பன்னிரண்டு வாரங்களுக்குமிடையில் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

ஹெல்த் கார்ட் கிடைப்பதற்கு முன்னரும், நீங்கள் டாக்டரிடமோ, ஆஸ்பத்திரிக்கோ சிகிச்சை பெறச் செல்ல முடியும் என்பதை நினேவில் வைத்திருங்கள். இப்படியான சந்தர்ப்பங்களில் புதிய விண்ணப்பப் பத்திரமொன்றைப் பூர்த்தி செய்து கையளிக்குமாறு அங்கு நீங்கள் கேட்கப்படுவீர்கள். அதன் மூலம், குறிப்பிட்ட அந்தத் தடவை நீங்கள் சிகிச்சை பெற்றதற்கான கட்டணம் டாக் டருக்கு / ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படும்." என்று இந்தச் சுற்றறிக்கையில் டாக்டர் ருெபர்ட் மக்மிலன் தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 52 இலங்கைத் தமிழர் ஒட்டாவா விமானத்தளத்தில் பல்கேரிய விமானத்தில் வந்து அகதிநிலை கோரினர்

## 52 SRILNKAN ARRIVE - CLAIMING REFUGEE STATUS

இலங்கைத் தமிழர்கள் ஐம்பத்திரண்டு பேர் ஒட்டாவா சர்வதேச விமான நிலையத்தில் ஒரே விமானத்தில் வந்திறங்கி, அகதி நிலை கோரியதன் மூலம் அங்கிருந்த அதிகாரிகளை அதிர்ச்சிக்குள்ளாக்கிய சம்பவம் கடந்த (ஆகஸ்ட்) மாதம் 18ம் திகதி புதன்கிழமை பிற்பகல் ஆறரை மணிக்கு நடைபெற்றது.

சிங்கப்பூரிலிருந்து சோபியா ஊடாக வந்த பல்கேரிய விமானமொன்றில் பயணஞ் செய்த மொத்தம் எழுபதுபேர் பயணத்துக்கான பாஸ்போட், மற்றும் தஸ்தாவேஜுகள் எதுவுமின்றி வந்திறங்கினர். இவர்கள் அனைவரும் அகதி நிலை கோரினர். இவர்களுள் இந்த 52 இலங்கைத் தமிழர்களும் அடங்குவர்.

இவர்களது வருகைக்கான காரணங்கள் பற்றி ஆர்.சி.எம்.பி. அதிகாரிகள் விசாரணையை மேற்கொண்டனர். இதே விமானத்தில் பயணஞ் செய்த இரண்டு கனடியர்கள் பொலிஸ் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். மேற்படி 52 பேரையும் கள்ளத்தனமாக விமானத்தில் கொண்டு வந்ததில் இவர்கள் இருவரும் சம்பந்தப்பட்டவர்களா என்பதைக் கண்டறிவதே விசாரணைகளின் நோக்கமாகவிருந்தது. பின்னர் இவர்கள் இருவருமே விடுவிக்கப்பட்டனர்.

"இந்த 52 பேரையும் இங்கு கொண்டு வந்தது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாகவிருந்தால் குறிப்பிட்ட விமான நிறுவனம் மீதுதான் எடுக்க வேண்டும். சரியான பயணப் பத்திரங்களின்றி இவர்களை விமானத்தில் ஏற்றி வந்ததற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று ஆர்சி.எம்.பி. இன்ஸ்பெக்டர் கெரி புச்சர் தெரிவித்துள்ளார்.

அகதிநிலை கோரிய அனைவரும் ரொறன் ரோவிலிருந்து ஒட்டாவா வந்திருந்த அவர்களது உறவினர்களுடன் செல்ல அனுமதிக்கப்பட்டதாக Canadian Press தெரிவித்துள்ளது.

மேற்படி 52 பேரும் ஒட்டாவா வந்த பல்கேரிய விமானத்தில், முக்கியமான வெளிநாட்டு அரசியல் பிரமுகர் ஒருவரும் பயணம் செய்ததாக தெரிய வந்துள்ளது.

# நோயாளியின் வரலாற்றைத் தெரிவிக்கும் புதிய 'வைத்திய அட்டை' அமலுக்கு வரும்

## EXPERIMENTAL HEALTH CARDS WITH PATIENT'S HISTORY

ஒவ்வொருவரும் தன்னைப் பற்றிய வைத்தியக் குறிப்பு அட்டையை, தன்னுடன் வைத்திருக்கும் நாள் வெகு தூரத்தில் இருக்கப் போவதில்லை. ஒன்ராறியோ மாநில அரசாங்கம் இதற்கான திட்டமொன்றை அமல்படுத்த முன்வந்துள்ளது.

கம்பியூட்டர் மூலம் தயாரிக்கப்படும் இந்தப் புதிய முறையிலான வைத்திய அட்டை, உங்களின் உடல்நிலை, உங்களுக்கு ஏற்பட்ட நோய்கள், அவற்றுக்கு வழங்கப்பட்ட சிகிச்சை, எங்கே, எப்போது எவரால் வழங்கப்பட்டது போன்ற பல்வேறு விபரங்களையும் ஒரு விநாடியில் தெரியப்படுத்தும் தன்மையானதாக அமையும்.

நீங்கள் தனிமையில் எங்காவது செல்லும் வேளையில், உங்களுக்குத் திடீரென ஏதாவது நோய் காணப்படுமானால், உங்களின் 'பழைய கதை' முழுவதையும் இந்த அட்டை உங்களுக்கு வைத்தியம் செய்யப் போகும், டாக்டருக்கோ, ஆஸ்பத்திரிக்கோ முழுமையாகத் தெரியப்படுத்தும். இதனால் உங்களுக்கு உடனடியாகச் சிகிச்சை அளிப்பதற்கும், சரியான சிகிச்சையை வழங்குவதற்கும் இந்த கம்பியூட்டர் வைத்திய அட்டை உதவி புரிகின்றது.

முதலில் பரீட்சார்த்தமாக இரண்டாயிரத்திலிருந்து மூவாயிரம் பேருக்கு புதிய வைத்திய அட்டை வழங்கப்படும். ஒன்ராறியோவின் Fort France என்ற நகரம் இந்தப் பரீட்சார்த்த அறிமுக நடவடிக்கைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. 1.6 மில்லியன் டாலர்கள் முதலில் இதற்குச் செலவிடப்படும்.

எதிர்வரும் நவம்பர் மாதத்திலிருந்து ஆறு மாத காலத்துக்கு இதனை நடைமுறைப்படுத்துவது என்றும், பின்னர் இது பற்றிய முடிவு எடுக்கப்படும் என்றும் மாநில சுகாதார அமைச்சின் அதிகாரியான லெய்ன் வொர்பிக் தெரிவித்தார்.

அநேகமாக அடுத்தாண்டில் ஒன்ராறியோ முழுவதிலும் இதனை அமல் செய்யக் கூடியதாகவிருக்கும் என்று அமைச்சு அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

நோயாளிகளுக்கே மட்டுமன்றி டாக்டர்கள், தாதிகள், ஆஸ்பத்திரி ஊழியர்கள் அனைவருக்கும் இந்தப் புதிய அட்டை முறை பலனுள்ளதாக அமையுமென்றும் வொர்பிக் சுட்டிக் காட்டியுள்ளார்.

# ஸ்காபுரோ பிரதேச கல்விச் சேவைகள்

ஆரம்பப் பாடசாலையிலிருந்து, வளர்ந்தோர் கல்வி, சமுகக் கல்வி, இரவு நேரப் பாடசாலை போன்ற பல்வேறு கல்வித் திட்டங்களையும் ஸ்காபுரோ கல்விச் சபை மேற்கொண்டு வருகின்றது.

*1990ம் கல்வி ஆண்டில், அதற்கு முன்னைய ஆண்டிலும் பார்க்க ஐம்பதாயிரம்* பேர் மேற்படி கல்வி வகுப்புகளில் பங்கு பற்றியுள்ளார்கள்.

கனடாவுக்குப் புதிதாக வருபவர்களின் தொகை தினசரி அதிகரித்து வருகின்றது. இதில் ஒரு குறிப்பிடத்தக்க தொகையினர் ஸ்காபுரோவுக்குள் குடியேறி வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இட நெருக்கடிக் குறைவு, தொழிற்சாலைகள் கூடுதலாக அமைந்துள்ளமை, போக்குவரத்து வசதி, கல்விப் போதனைக்குச் சாதகமான சூழல், போதிய வைத்தியசாலைகள் போன்றவை இதற்கான சில அடிப்படைக் காரணங்களாகும்.

இந்த வேளையில் ஸ்காபுரோவில் வசித்து வரும் தமிழர்களும், புதிதாகக் குடியேறுபவர்களும் ஸ்காபுரோப் பிரதேசத்தில் புதிய கல்வி வகுப்புகளில் அனுமதி பெறுவதற்கு எங்கு தொடர்பு கொள்ள வேண்டும் என்பதை அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

இதற்கு வசதியாக கீழ்வரும் கல்வி அலுவலகங்களின் பெயர்களும், தொலைபேசி இலக்கங்களும் இங்கே பிரசுரம் செய்யப்படுகின்றன:

Adult Basic Learning 396-6904
Co-operative Education 396-7862
Community Liaison Office 396-6921/2
Continuing Education 396-7663
English as a Second Language 396-6909
Enrolment Information 396-7547
French Immersion 396-7527
Kindergarten Registration 396-7547
Night School 396-7663
Program Department 396-7598
Special Education 396-7585
Visa Students 396-7547
Main Swichboard 396-7100
Communication Office 396-7541

Scarborough Board of Education,
140 Borough Drive, Scarborough,
Ontario M1P 4N6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரொறன்ரோ நகரின் அடுத்த முதல்வர் யார்?
# WHO IS THE NEXT MAYOR OF TORONTO?






**NEW POLL: From left, June Rowlands is favored by 38 per cent of decided voters, Jack Layton by 27 per cent, Susan Fish by 23 per cent, Betty Disero by 4 per cent.**

ரொறன்ரோவின் அடுத்த நகர முதல்வர் (Mayor of Toronto) *யார்?* இதற்கான விடை அடுத்த மாதம் - நவம்பர் *12ம்* திகதி இரவு தெரியவரும்.

தற்போதைய நகர முதல்வர் திரு. ஆர்ட் எக்லிட்டனின் பதவிக் காலம் அடுத்த மாதத்துடன் முடிவடைகின்றது. எனவே புதிய நகர முதல்வரை ரொறன்ரோ நகர மக்கள் தெரிந்தெடுப்பதற்கான வாக்களிப்பு நவம்பர் மாதம் *12ம்* திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

நகர முதல்வர் பதவிக்கு முக்கியமான நான்கு பேர் இம்முறை போட்டியிடுகின்றனர். June Rowlands, Jack Layton, Susan Fish, Betty Disero ஆகிய நால்வருமே போட்டியிடுபவர்கள். இவர்கள் நால்வரும் ஏதோவொரு வகையில் அரசியலிலும், பொது வாழ்க்கையிலும் நீண்ட காலத் தொடர்புடையவர்கள். இவர்களுள் இருவர் தற்போது மாநகராட்சி அங்கத்தவர்களாக இருக்கின்றனர். ஒருவர் ஒன்ராறியோ மாநில பாரளுமன்றத்தில் உறுப்பினராக இருந்தவர். மற்றொருவர் கடந்த நான்கு வருடங்களாக மெற்ரோ பெரும்பாகபொலிஸ்சேவைக் கமிஷனின் தலைவர் பதவியை வகித்தவர்.

கனடாவின் Environics Research Group Ltd என்ற நிறுவனம் அண்மையில் ரொறன்ரோ ஸ்டார் பத்திரிகைக்காக நகர முதல்வர் தொடர்பான கருத்துக் கணிப்பீடு ஒன்றினை நடத்தியது. வாக்களிக்கும் உரிமையுள்ள குறிப்பிட்ட ஒரு தொகையினர் இக் கருத்துக் கணிப்பீட்டுக்காக பேட்டி காணப்பட்டனர். இதன் பிரகாரம் June Rowlands அவர்களை *38* வீதமானவர்கள் ஆதரிப்பதால் அவர் முன்னணியில் திகழுகின்ருர்.

Jack Layton அவர்களை *27* வீதமானவர்களும், Susan Fish அவர்களை *23* வீதமான வர்களும், Betty Disero அவர்களை *04* வீத மானவர்களும் ஆதரிப்பதாக இந்தக் கருத்துக் கணிப்பீடு தெரிவிக்கின்றது.

இந்தக் கருத்துக் கணிப்பீட்டின் முடிவின் பிரகாரமே மக்களின் வாக்களிப்பும் அமையுமென்று நிச்சயமாக சொல்ல முடியாது. நகர முதல்வர் பதவிக்குப் போட்டியிடும் நால்வரது புகைப்படங்களும், அவர்கள் கருத்துக் கணிப்பில் பெற்ற விகிதாசாரத்தின் வரிசையில் மேலே பிரசுரமாகியுள்ளது.

## காப்புறுதித் திட்ட வாக்குறுதி காற்றில் பறந்தது

ஒன்ராறியோ மாநிலத்தின் பொப் ரே தலைமையிலான NDP அரசாங்கம் தனது மற்றொரு தேர்தல் வாக்குறுதியைக் காற்றில் பறக்க விட்டுள்ளது.

வாகனக் காப்புறுதியை ஐந்து மில்லியன் டாலர் செலவில் தனது அரசாங்கம் ஏற்று நடத்துமென அவர் முன்னர் வாக்குறுதி அளித்திருந்தார். ஆனல் இப்போது, இந்தக் காப்புறுதித் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு மட்டும் *1.5* மில்லியன் டாலர்கள் வரை செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாலேயே இதனைச் செயற்படுத்தமுடியாதுள்ளது என்று பிரதமர் பொப் ரே அறிவித்துள்ளார்.

எனினும் தற்போது நடைமுறையிலுள்ள வாகனக் காப்புறுதிச் சட்டத்தில் புதிய திருத்தங்கள் கொண்டு வருவதன் மூலம் சாரதிகளின் தவணைக் கட்டணங்களை (வருடாந்த) குறைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் உறுதி கூறியுள்ளார்.

எதிர்க்கட்சிகளான லிபரலும், கன்ஸர்வேடிவும் பொப் ரேயின் இந்த முடிவை வரவேற்றுள்ளன.

## ரொறன்ரோ பெரும்பாக, மிஸிஸாக பிரதேச சட்ட உதவி (Legal Aid) அலுவலகங்கள்

ரொறன்ரோ பெரும்பாகத்தில் இரண்டும் மிஸிஸாகவில் ஒன்றுமாக மொத்தம் மூன்று சட்ட உதவி நிலையங்கள் (Legal Aid Offices) இயங்குகின்றன.

சட்ட உதவி நிலையமானது தொழில் இல்லாதவர்களுக்கும், குறிப்பிட்ட தொகைக்குக் குறைவான மாத வருமானமுள்ளவர்களுக்கும் இலவச சட்ட உதவியை வழங்கும் மையங்களாகும். நேரடியாக நிதியுதவி எதுவும் வழங்கப்படமாட்டாது. தேவைப்படுபவர்களுக்கு இலவசமாக வழக்கறிஞர்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுவார்கள்.

ரொறன்ரோ பெரும்பாகத்துக்கான சட்ட உதவி நிலையங்களில் ஒன்று ரொறன்ரோவிலும், மற்றது ஸ்காபுரோவிலும் அமைந்துள்ளது.

ரொறன்ரோ சட்ட உதவி நிலையத்தின் முகவரி: 70 Centre Avenue, Toronto, Ontario, M5G 2E7. வேலை நாட்களில் காலை *8:00* மணி முதல் பிற்பகல் *3:30* மணி வரை அலுவலகம் திறந்திருக்கும். தொலைபேசி இலக்கம்: *(416)-598-0200*

ஸ்காபுரோ சட்ட உதவி நிலையத்தின் முகவரி: *1921* Eglinton Avenue East, Unit 1A, Scarborough, Ontario. M1L 2L6. வேலைநாட்களில் காலை *8:30* மணி முதல் பிற்பகல் *3:30* மணி வரை அலுவலகம் திறந்திருக்கும். தொலைபேசி இலக்கம்: *(416) 750-7172.*

மிஸிஸாகவுக்கான சட்ட உதவி அலுவலக முகவரி: 131 Brunel Road, Mississauga, Ontario, L4Z 1X3. தொலைபேசி இலக்கம்: *(416) 890-4644.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் பிரச்சனை
## YOUR PROBLEM

கடந்த தமிழர் தகவல் இதழில் குறிப்பிட்டிருந்தவாறு, 'உங்கள் பிரச்சனை' என்னும் புதிய பகுதி தொடர்பான விபரங்களை இங்கு தருகின்றோம்.

இங்கு வாழும் தமிழர்களின் பிரச்சனைகளைக் கண்டறிவதற்காகவும், அவற்றுக்குப் பரிகாரம் காணுவதற்கு வழியமைத்துக் கொடுப்பதற்காகவுமென பிரத்தியேகமாக இந்தப் பகுதி ஆரம்பிக்கப்படுகின்றது.

தமிழ் மக்கள் இங்கு அன்றாடம் பல பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர். அவை பலவேறு விடயங்களுடன் சம்பந்தப்பட்டவை. குடிவரவு (Immigration), வேலைவாய்ப்பு(Employment), பொதுநல உதவி(welfare), சௌக்கிய சேவை (OHIP), பாடசாலை அனுமதி, பல்கலைக்கழக அனுமதி, ஆங்கில வகுப்புகள், வளர்ந்தோர் கல்வி நிலைய அனுமதிகள், குடியிருப்பு மனைகள் என்று பலதரப்பட்ட பிரச்சனைகள் எம்மவருக்குண்டு.

குடிவரவு சம்பந்தப்பட்ட பிரச்சனைகளே ஏராளம். அகதி நிலைக்கோரிக்கையாளர்கள், அகதிகள் விசாரணை, Legal aid பெறுதல், லான்டட் பத்திரத்தை நிரப்புதல், Backlog அலுவலகம் அனுப்பும் Paper Screening பத்திரங்களை நிரப்புதல், வேலை அனுமதிப் பத்திரம்/பாடசாலை அனுமதிப் பத்திரம் ஆகியவைகளுக்கு விண்ணப்பித்தல், Minister's Permit/ Visitor's Permit ஆகியவைகளை நீடிப்பதற்கு விண்ணப்பம் செய்தல், Pre-Landing நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளித்தல், Travel Documentக்கு விண்ணப்பம் செய்தல், Medical Examinationக்கு உட்படுத்துதல் என்று பல்வேறு அம்சங்களைக் கொண்டது குடிவரவு இலாகா வேலைகள்.

மொழிப் பிரச்சனை காரணமாக மட்டுமன்றி, சரியான விபரமும், போதிய தகவலும் பெற முடியாததால் எம்மவர் பலர் அங்குமிங்கும் அலையும் அநாவசியம் ஏற்படுவதை தினசரி நாம் காண்கின்றோம்.

இவ்வாறான பிரச்சனைகட்குட்பட்டவர்களின் தேவைகளைக் கண்டறிந்து, அவற்றுக்குச் சரியான விளக்கத்தையும், பதிலையும் வழங்கும் நோக்குடன் 'உங்கள் பிரச்சனை' பகுதி ஆரம்பிக்கப்படுகின்றது. அவசியமேற்படும் வேளைகளில் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளின் கவனத்துக்கு உங்கள் பிரச்சனைகள் கொண்டு வரப்பட்டு, அவர்களிடமிருந்து விளக்கம் பெறப்பட்டு அவை தமிழர் தகவலில் பிரசுரமாகும்.

நீங்கள் செய்ய வேண்டியது என்ன?

உங்கள் பிரச்சனையை விளக்கமாகவும், சுருக்கமாகவும் தமிழில் எழுதி எங்களுக்கு அனுப்பி வையுங்கள். கடதாசியின் ஒரு பக்கத்தில் மட்டும் பிரச்சனைகளை எழுதவும்.
உங்கள் பெயர், முகவரி ஆகியவைகளுடன் உங்களுடன் அவசிய மேற்படின் நாம் தொடர்பு கொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கத்தையும் மறவாமல் எழுதவும். தொலைபேசி இலக்கம் பிரசுரிக்கப்படமாட்டாது. அந்தரங்கமாக வைக்கப்பட்டிருக்கும். உங்கள் பெயர், முகவரிகளை பிரசுரம் செய்ய விரும்பாவிடின் அதனைக் குறிப்பிட்டு எழுதவும்.

உங்கள் பிரச்சனைகள் எமக்குத் தபால் மூலம் கிடைக்கும் வரிசைக் கிரமத்தின்படி அவற்றுக்கான பதில்கள் பிரசுரமாகும். ஒரே மாதிரியான பிரச்சனைகளை பலர் எழுதியனுப்பினால் அதற்கான பதில் சேர்த்துப் பிரசுரிக்கப்படும்.

உங்கள் பிரச்சனைகளை அனுப்ப வேண்டிய முகவரி YOUR PROBLEM, Tamils' Information, P.O. Box-3, Station 'F', Toronto, Ontario, M4Y 2L4. தயவு செய்து மேற்படி முகவரியை ஆங்கிலத்தில் எழுதவும்.

உங்கள் பிரச்சனைகளை தபால் மூலம் அனுப்புவதற்கு முடிவு திகதி எதுவும் கிடையாது. ஒவ்வொரு தமிழர் தகவல் இதழிலும் உங்கள் பிரச்சனைகளுக்கான பதில்கள் வெளிவரும். எனவே தொடர்ந்து உங்கள் பிரச்சனைகளை எமக்கு அனுப்பலாம்.

எழுதுபவரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் குறிப்பிடப்படாதவை பரிசீலனைக்கு எடுக்கப்படமாட்டா என்பதை நினைவில் வைத்திருக்கவும்.

ஆசிரியர்



# நகரில் நடைபெற்ற ந

செப்டம்பர் மாத முதலாம் நாள் பிற்பகல் ஆறு மணிக்கு ரொறன்ரோ கூட்டுறவு இல்ல மண்டபம் (லான்ட்ஸ்ரவுண்) கலை இலக்கிய நண்பர்களால் நிரம்பிக் கொண்டிருந்தது. திரு.நவம் அவர்களின் பிரசவங்களான ஒரு சிறு கதைத் தொகுப்பும், அரசியல் கட்டுரைத் தொகுப்பும், கூடவே ஒரு மாதாந்தரியும் அன்று வெளியிடப்பட்டன.

விழாவிற்குத் தலைமைதாங்கிய திரு.அ.கந்தசாமியின் வார்த்தைகளில் நவம் அவர்களைக் குறிப்பிடுவதானால், "அவர் ஒரு கலைஞன்; கவிஞன்; நாடகாசிரியன்; நவீன மேடை உத்திகள் கைவந்த ஒரு நாடக நெறியாளன்; உன்னதமான படைப்பாளி; யாவற்றிற்கும் மேலாக மானிடத்தை நேசிக்கும் ஒரு மனிதன்" என்பதாகும்.

குறைவற்ற நிறைந்த அவை என்பதால் விழா குறித்த நேரத்தில் தொடங்கியதையோ அன்றிக் குறித்த காலத்தில் முடிவடைந்ததையோ பெரிது படுத்திப் பெருமைப்படவேண்டியதில்லை.

திரு.அ.கந்தசாமி தமது தலைமை உரையில், சமுகத்தில் எழுத்தாளன் வகிக்க வேண்டிய முக்கிய பாத்திரத்தினை வலியுறுத்தினார். இலக்கியங்கள் எல்லாம் சாதாரணமான வாசகனைச் சென்றடையக் கூடியதாக படிப்பாளியின் அலைவரிசையில் கலைத்தன்மை குலையாது படைக்கப்பட வேண்டும் என்பதே அவரது தலைமை உரையின் சாராம்சம்.

இலக்கியக் கனதி கொண்டதாக தமது உரையை அவர் அமைக்க முயற்சித்தது குறிப்பிடத்தக்கது.

ஆனால் விழாவின் மேடை நிகழ்ச்சியில் பங்கு பற்றிய அனைவரும் அதனைக் கண்டுகொள்ளாமல் தங்

கள் இடத்தினை விட்டு நகர
தில் ஒரு பாராட்டு விழாவா
தது.

இதனால் ஒரு இலக்கியச்
வந்த இதயங்கள் (அவை எ
வாகவே இருப்பினும்) ஏ
றமே கண்டன.

இலக்கிய வெளியீட்டு விழ
னில் 'வெளியீட்டுரை' மிக
காத்திரமான விடயம். பே
ரியர்கள் சு.வித்தியானந்
க.கைலாசபதி, கா.சிவத்த
போன்றோரே பலத்த தயக்
துடன்தான் இவ்வ
பொறுப்புக்களை ஏற்பதுண்

இவ்விழாவில் திரு.த.சி
சன் இப்பெரும் பொறுப்ப
ஏற்றிருந்தார். தாம் கூற இ
தவற்றை தலைவர் கூறிவிட்
என்று அவர் கூறியதுடன் வெ
யீட்டுரை முற்றுப் பெற்றது.

கருத்துரை வழங்கியோரா
வார்கள் என்ற எதிர்பார்ப்பு

எழுத்தாளர் அங்கவை நான்
விமர்சிக்கும் பொறுப்பினை
சிகையின் பெயரை விம
விட்டு உள்ளடனைப் பற்ற
லவில்லை.

சிறுகதைத்தொகுதியை வி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நவம் பிரசவித்த நூல்களின் வெளியீடு

விட்டு நகர மறுத்ததால், மொத்தத்
டு விழாவாகவே இவ்விழா அமைந்

இலக்கியச் செறிவை எதிர்நோக்கி
ள் (அவை எண்ணிக் கையில் குறை
பினும்) ஏமாற்

ரியீட்டு விழாவி
டுரை' மிகவும்
விடயம். பேராசி
த்தியானந்தன்,
கா.சிவத்தம்பி
லத்த தயக்குத்
இவ்வகைப்
ஏற்பதுண்டு.

திரு.த.சிவதா
பொறுப்பினை
ாம் கூற இருந்
ர் கூறிவிட்டார்
யதுடன் வெளி
பெற்றது.

ங்கியோராவது இதனை ஈடு செய்
திர்பார்ப்பும் வீணாகியது.

கவை நான்காவது பரிமாணத்தினை
பாறுப்பினை ஏற்றிருந்தார். அவர் சஞ்
யரை விமர்சனத்திற்கு உட்படுத்தி
டனைப் பற்றிக் கருத்தேதும் சொல்

குதியை விமர்சிக்க வந்திருந்த காலம்

சஞ்சிகையின் ஆசிரியர் செல்வத்திடம் அதிகமாய் எதிர்பார்க்கத் தூண்டும் வண்ணம் தலைவரின் அறிமுக உரை அமைந்திருந்தது.

அவரும் மிக அக்கறையுடன் தனது உரையை எழுதித் தயாரித்து வந்திருப்பதைக் கண்டு, இலக்கிய மழை கொட்டோகொட்டென்று பொழியப் போவதாக எண்ணி நிமிர்ந்து உட்கார்ந்த பலர், அவர் வாசிக்கத் தொடங்கியதும் இருக்கையில் நெளியத் தொடங்கினர்.

நூல்களின் ஆசிரியர் க.நவம், திருவாளர்கள் த.சிவதாசன், க.செல்வம், த.ஸ்ரீபதி, அ.கணேசாள் ஆகியோர் உரையாற்றுவதையும், விழாத்தலைவர் அ.கந்தசாமி அதிதி ஒருவரிடம் முதற் பிரதியை வழங்குவதையும், கவியரங்குக்குத் தலைமை தாங்கிய ஆனந்த்பிரசாத் தலைமைக் கவிதையைப் படிப்பதையும், கவிஞர்கள் நிலா குகதாசன், சிவா. சின்னத்தம்பி (சம்பு), மலையன்பன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் மேலுள்ள படத்தில் காணலாம். மண்டபம் நிறைந்திருந்த சபையோரில் ஒரு பகுதியினரை கீழுள்ள படங்களில் பார்க்கலாம்.

அரசியற் கட்டுரைத் தொகுப்பினை விமர்சிக்க எழுந்த திரு.த.சிறீபதி அவர்களால் கட்டுரைகள் விமர்சிக்கப்படவில்லை. எழுதப்பட்ட கட்டுரைகள் பற்றி மௌனம் சாதித்தவர், எழுதப்படாத இலங்கைப் பிரச்சனை பற்றி (நியாயமான) கேள்வியை எழுப்பினார்.

மொத்தத்தில் கருத்துரை வழங்கிய எவரும் திரு.நவத்தின் ஆக்கங்களைப் படித்ததாகவும் தெரியவில்லை. விமர்சிக்கவும் இல்லை.

பதிலுரை அளிக்க வந்த திரு.நவம் மிகவும் உணர்ச்சி வசப்பட்டவராகக் காணப்பட்டார். இதனால் அவருடைய பங்கையும் விழாத் தலைவரே ஆற்ற வேண்டிய நிர்பந்தத்திற்குள்ளானார்.
"இவர் என்ன நவத்தின் 'வாய்' போலும் என்று முன் வரிசையில் இருந்த சிலரின் முணு முணுப்பிற்குள்ளானார் விழாத் தலைவர்


இறுதி நிகழ்ச்சியான கவியரங்கிற்குத் தரப்பட்ட தலையங்கம் அரசியலைத் தவிர்க்கும் நோக்குடன் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது போலத் தெரிந்தது. என்ன காரணமோ?

தலைமை வகித்த கவிஞர் ஆனந்த்பிராசத் ஒரு தொகுப்புரையாளராக செயற்பட்டார். கவிஞர்கள் சிவா சின்னத்தம்பி (சம்பு), நிலா குகதாசன், மலையன்பன் ஆகியோர் கவி படித்தனர். சம்புவின் கவிதை சபையோரால் நன்கு வரவேற்கப்பட்டது. சிறந்த கவிஞரான நிலா குகதாசன் அன்று ஏனோ சோபிக்கவில்லை. மலையன்பனோ அரசியலை வலிந்திழுத்து தம்மையும், சபையோரையும் சங்கடத்திற்குள்ளாக்கினார்.

ஒரு இலக்கிய விழாவிற்கு மண்டபம் நிறைந்த கூட்டம் புலம்பெயர்ந்த நாடொன்றில் கூடுவது பெருமைக்குரியதே! ஆனால் அதிகப்படியான எதிர்பார்ப்புக்களோடு வந்த இலக்கிய நண்பர்கள்தான் ஏமாற்றத்துடன் திரும்பினர். எப்படி இருப்பினும் ஒரு ஓய்வு நாளின் மாலைப் பொழுது இனிமையில் கரைந்தது.

எழுத்தாளர் நவம் அவர்களைப் பொறுத்தளவில் குடும்பப் பாங்குடன் அமைந்த ஒரு வெற்றி விழா இது என்று கூறலாம்.

மேடையில் ஏறியவர்கள் (நன்றியுரை கூறியவர் உட்பட) கொஞ்சமாவது சீரியஸாகச் சிந்தித்துச் செயற்பட்டிருந்தால் இதனை ஒரு கனதி நிறைந்த இலக்கிய விழாவாக்கியிருக்கலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழத்தில் தேவி சோதிட களஞ்சியம் என்ற பெயரில் எமது தந்தையார் திரு. செல்லப்பா மார்க்கண்டு அவர்களாலும் அவர்தம் மறைவுக்குப் பின்னர் எம்மாலும் நடத்தப்பெற்று வந்த இந் நிறுவனம் கனடா வாழ் மக்களின் சோதிட சேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக கப்றிக்கோன் சோதிட நிலையம் என்ற பெயரில் தமது சேவைகளை நல்கி வருகின்றது.

# கப்றிக்கோன் சோதிட நிலையம்

எமது சேவைகள்

- ஜாதகம் கணித்தல்
- எதிர்காலப் பலாபலன்கள் பார்த்தல்
- திருமணம் பொருத்தம் நிச்சயித்தல்
- சுபமுகூர்த்தம் அமைத்தல்
- நட்சத்திர - கிரக எண்சோதிட முறைப்படி பெயர் அமைத்தல்

மற்றும் சோதிட சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டியவர்

**ஏழுவையூர் மார்க்கண்டு பரமலிங்கம்**
**CAPRICORN ASTRO CENTRE**
1455 William Sport Dr. #308
Mississauga, Ontario L4X 2T5 (Dixie & Bloor)
**DOOR BUS NO -103**
**Tel: (416) 602-1445**

ஓம்



மணவறை, பூமாலை, சடைநாகம், தலைநகை, தலைப்பாகை, மணப்பெண் அலங்காரம், பந்தல் அலங்காரம், கல்யாண மண்டபம், கல்யாண அழைப்பிதழ், கல்யாண பூசைப்பொருட்கள், கல்யாணப் பலகார, உணவு வகைகள், நாதஸ்வரம், தவில், படப்பிடிப்பு, Van Moving ஆகிய அனைத்துச் சேவைகளையும் ஒரே இடத்தில் வழங்குகின்றோம்.

திருமணப் பதிவு, திருமணம், புதுமனை புகுதல், கடைதிறப்பு வைபவம், புண்யாக வாசனம், சிரார்த்தம் (திவசம், வீட்டுக் கிரிகை) பூப்புனித நீராட்டு மங்கள வைபவம், அனைத்தையும் வேதாகம விதிமுறைப்படி நிறைவேற்றுகின்றோம்.

இவற்றுடன் ஜனன பலன், ஜோதிடம், நாள் பார்த்தல், விவாகப் பொருத்தம் ஆகியவைகளையும் நாம் கவனிக்கிறோம். ஆலய விழாக்களுக்கான சப்ரம், பூமாலைகளுக்கும் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

**பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் (416) 285-0974**
**ஸ்ரீநிவாச சர்வானந்த குருக்கள் (416) 759-7733**
முகவரி **84 Bertrand Ave. Scarborough, Ontario. M1K 2S6**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவியைத் துன்புறுத்துவது என்றல் என்ன? ஆண்கள் துணைவியரை ஏன் துன்புறுத்துகின்றனர்?

## WHAT IS WIFE ASSAULT - IS IT A CRIMINAL OFFENCE?

மனிதர்கள் ஒருவரை ஒருவர் தாக்குவது எவ்வாறு குற்றமாகுமோ அதுபோல மனைவியைத் தாக்குவதும் ஒரு கிறிமினல் குற்றமாகும்.

கனடாவில், மனைவியின் விருப்பம் எவ்வாறிருப்பினும், குற்றம் செய்த கணவன் மீது வழக்குத தொடர்வதும், பலதரப்பட்ட தண்டனை விதிப்பதும் அரசின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.

தகுந்த நடவடிக்கைகள் எடுக்காதவிடத்து, மனைவியைத் தாக்குதல் தீவிரத்திலும் எண்ணிக்கையிலும் கூடிக்கொண்டு போவதேயொழிய மறைந்துவிடமாட்டாது என புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. தனது கட்டுப்பாடற்ற வன்மையான நடத்தைகளுக்குக் கணவனே பொறுப்பேற்க வேண்டும். கணவனின் வன்மையை தங்களால் கட்டுப்படுத்த முடியாது என்பதை பெண்கள் உணர வேண்டும்.

பெற்ருேருக்கிடையே நிகழும் வன்மையான சம்பவங்களால் பாதிக்கப்பட்ட பிள்ளைகள் குழப்பமுள்ள குணதிசயங்களுடையவர்களாகக் காணப்படுவதோடு கல்வியிலும் சிறந்து விளங்குவதில்லை. இப்பிள்ளைகளும் வளர்ந்தபின் தங்கள் மனைவியைத் துன்புறுத்துபவர்களாகவே வருகின்றனர்.

"மனைவியைத் துன்புறுத்தல் என்ருல் என்ன?" ஒரு மனைவிக்கு அல்லது காதலிக்கு எதிராக, அவள் நடத்தையைக் கட்டுப்படுத்துவதற்காகவோ அல்லது அவளைப் பயமுறுத்துவதற்காகவோ உடல் ரீதியாகவோ அல்லது மனேதத்துவ முறையிலோ அவளை ஒரு கணவன் துன்புறுத்துவதென்றே இதற்கு இலக்கணம் கூறலாம்.

இது ஒரு புறம் உடல் ரீதியாக அல்லது மனேதத்துவ ரீதியாக கணிசமான அளவுக்குப் பாதிக்கின்ற ஒரேயொரு நிகழ்ச்சியை அடக்கும். ஆனல் அநேகமாக, ஒரு பெண்ணின் நல்வாழ்விற்கு அல்லது குடும்ப வாழ்விற்குக் குந்தகம் விளைவிக்கக் கூடிய, உடற்காயங்கள் அல்லது உணர்ச்சி, மனேநிலைப் பாதிப்புகளை உண்டாக்குவது தொடர்பான நிகழ்ச்சிகளையே குறிக்கும்.

உடற் காயங்கள் என்பது அடித்தல், உதைத்தல் ஆகியவற்றினல் ஏற்படும் சிறுகாயங்கள் தொடக்கம், உள் இரத்தப் பெருக்கு, எலும்பு முறிவு முதலியவற்ருேடு இறப்பை உண்டாக்கக் கூடிய பாரதூரமான காயங்களும் உண்டு. *1988*ம் ஆண்டில் குடும்பப் பிணக்குகளால் *97* கனடிய பெண்கள் கொல்லப்பட்டனர்.

உணர்ச்சித் தகர்வுகள், மனேநிலை பாதிப்புடன், நித்திரையின்மை, முதுகுவலி, களைப்பு, இதயத் துடிப்பு போன்ற குணமடையாத உடல் தாக்கத்தையும் மனேநிலை காரணமான உடல் விளைவுகளையும் உண்டாக்கும். கணவனின் துன்புறுத்தலுக்குள்ளான சில பெண்கள் மது பாவிப்பதையோ போதை வஸ்துக்களையோ நாடுவர். அல்லது தற்கொலை செய்யவும் முயற்சிப்பர்.

மனைவியைத் துன்புறுத்துவதைப் பார்க்கும் பிள்ளைகளிடம், பெற்ருேரினல் துன்புறுத்தப்பட்ட பிள்ளைகளில் காணப்படும் பாதிப்புகள் காணப்படும்.

பெண் பிள்ளைகள் தனிமையை விரும்புவர்களாகவும், அங்கலாய்ப்புடையவர்களாகவும் இருப்பர். ஆண் பிள்ளைகள் தங்கள் சகபாடிகளிலும், ஆசிரியர்களிலும் ஆத்திரமுடையவர்களாக இருப்பதோடு தங்களினதும், மற்றையவர்களினதும் சொத்துக்களையும் அழிப்பவர்களாகவும் இருப்பர். இப்பிள்ளைகள் தன்மானமற்றவர்களாக இருப்பதோடு பரீட்சைகளிலும் சித்தியடைவதில்லை.

ஆண்கள் தங்கள் துணைவிகளை துன்புறுத்துவதற்கு பல காரணங்கள் சம்பந்தமுடையன.

துன்புறுத்தற்காரர், மற்ருேரின் பார்வையில் திறமைசாலிகளாகவும் சிறப்பாக வாழ்பவர்களாகவும் காணப்படுவர். ஆனல் குடும்பத்தினுள் அவர்கள் கட்டுப்பாட்டை வைப்பதோடு, அநேகமாக நண்பர் அல்லது வேறு குடும்பம் போன்ற வெளித்தொடர்புகளில் மிகப் பொருமையுடையவர்களாகவும் இருப்பர். இவர் தங்கள் துணைவிகளிலேயே குற்றம் சுமத்துவதோடு, தங்களுடைய வன்செயல்களுக்குப் பொறுப்பையும் ஏற்கமாட்டார். இவர் தங்கள் வேதனைகளையும் உணர்ச்சிகளையுமே அனுபவிப்பதில்லையாகையால், தங்கள் உணர்ச்சிகளைக் கோபமாகக் காட்டுவதோடு மற்றவர்களின் உணர்ச்சிகளை மதிப்பதுமில்லை. மற்றவர்களிலிருந்து ஒதுங்கியிருப்பதோடு தங்கள் துணைவியில் பெருமளவு தங்கியிருப்பதனல், அவளின் வெளித் தொடர்புகளினல் அச்சமடைவர். இதன் விளைவாகவே துணைவியைக் கட்டுப்படுத்தும் நோக்கமாக வன்மையைப் பாவிப்பர்.


ஆங்கில மூலம்: Dr.ராஜி துரைராஜா

தமிழில்: எஸ். சிற்றம்பலம்


ஒன்ராறியோவில் குற்றம் நிகழ்ந்ததற்கு தகுந்த ஆதாரமிருப்பின், வீட்டில் நிகழும் வன்செயல்கள் சகலதுக்கும் வழக்குத் தொடருமாறு எல்லா பொலிஸ் பகுதிக்கும் கட்டளை அனுப்பப்பட்டுள்ளது. வழக்குத் தொடர்வதற்கான சாட்சியமிருப்பின் அரசு அப்பொறுப்பை ஏற்றுச் செய்யும்.

மனைவியைத் தாக்குபவர்களுக்கெதிராக வழக்குத் தொடருமாறு பொலிஸ் பகுதிகளுக்கு அறிவிக்கப்பட்டிருக்கையில் எக்காரணத்தையிட்டும் பொலிஸ் நடவடிக்கை எடுக்க தவறுமிடத்து தாக்கப்பட்ட பெண் ஒருவர் தன் துணைவருக்கெதிராக வழக்குத் தொடர முடியும்.

மனைவி தாக்கப்பட்டதை பொலிஸில் புகார் செய்வதா, விடுவதா என்பது மனைவியினதோ அல்லது இதைப்பற்றி அக்கறை கொண்டுள்ள ஒரு பிரஜையினதோ தீர்மானமாகும். புகார் செய்தது யாராயிருப்பினும், வழக்கை எவ்வாறு நடத்துவது என்பதை அரசு தரப்பு வக்கிலே தீர்மானிப்பார் என்பதை மனைவி உணர்வது அவசியம். ஆகவே கிரிமினல் நீதியின் ஈடுபாடு எவ்வளவு தூரம் தொடரும் என்பது தாக்கப்பட்ட மனைவியின் தீர்மானத்தில் இருப்பதில்லை. அரசு தரப்பு வக்கீல் மாத்திரமே வழக்கை வாபஸ் செய்ய முடியும்.

சிறிய குற்றங்களுக்கு ஆறு மாத மறியலே ஆகக்கூடிய தண்டனையாகும். ஆயுதத்தினல் தாக்குவதும், உடல் தீங்குகள் விளைவிக்கும் தாக்கலும் கடுமையான குற்றங்களாகையால் இதற்கு பத்து வருட மறியல் ஆகக் கூடிய தண்டனையாகும். பாரிய தாக்கங்களுக்கு கூடியது பதினன்கு வருட மறியலாகும்.

கனடிய சமுகம் வீட்டு வன்மையை மேலும் பொறுப்பதற்குத் தயாராக இல்லை என்பதையும் வன்மையான நடத்தைகள் மாற்றக்கூடியவை என்பதையும் சகலரும் அறிய வேண்டி, கிறிமினல் நீதிப்பகுதி எடுத்துக் கொண்ட இன்னெரு முயற்சி, நீதிமன்றம் வற்புறுத்தி வைத்தியம் செய்வதாகும்.

கிறிமினல் நீதிப்பகுதியினல் தாக்கும் தன்மையுடைய ஆணகளுக்கான சிகிச்சைத் திட்டங்கள் உள்ளன.

*1988* முதல் துன்புறுத்துவோர்க்கான *114* திட்டங்கள் செயல்படுகின்றன. இவற்றில் பாதி ஒன்ராறியோவில் உள்ளன.

துன்புறுத்தும் தன்மையுடைய ஆண்களுக்கான திட்டங்களின் நோக்கம், இவர்களைத் தங்களின் வன்மையான நடத்தைகளுக்கு பொறுப்பேற்க தூண்டியும், அவர்களின் வன்மையான நடவடிக்கைகளை அவர்கள் மாத்திரமே மாற்ற முடியும் என்பதை அறியவைத்தும், பெணகளுக்கெதிரான வன்மைகளுக்கு ஒரு முடிவு தேடுவதேயாகும்.

இத்திட்டங்கள் ஆண்களுக்கு, அவர்களின் கோபத்தையும் முரணபாடுகளையும் மாற்றும் முறையில் கையாளுவதைப் படிப்பதற்கு சந்தர்ப்பமளிக்கின்றன. தாக்கும் ஆண்களுக்கான திட்டங்கள், மனைவியைத் துன்புறுத்தலுக்கு முடிவு தேடுவதற்கான நீண்ட கால தந்திரோபாயத்தின் ஓர் முக்கிய பகுதியாகும்.

மனைவியைத் தாக்குதல் ஒரு கிறிமினல் குற்றம். குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டால், கணவன் தனது மனைவியையும் பிள்ளைகளையும் இழப்பது மாத்திரமல்லாமல், தனது தொழிலையுமிழந்து அவரின் குடும்பம், நணபர்கள் ஆகியவர்களினல் ஒதுக்கப்படுவர். இது அவரை தன்மானமிழந்து மனக்கிலேசமடையச் செய்யும்.

குணப்படுத்த ஓர் மருத்துவமுறை கண்டு பிடிக்கப்படாதவிடத்து, மனைவியைத் தாக்குபவர் தொடர்ந்து தனது மனைவியை வருத்திக் கொண்டேயிருப்பார். அல்லது தாக்குவதற்கு வசதியான இன்னேர் தொடர்பை ஏற்படுத்துவார்.

ஆகவே அவரின் வன் செயல்களை தடுப்பதற்கான முயற்சியிலேயே கவனம் செலுத்த வேண்டும்.

மனைவியைத் தாக்கும் ஆண்களுக்கான திட்டங்களில் நாடி வருவோர்க்கு இதற்கான உதவி உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CANADIAN IMMIGRATION கனடிய குடிவரவு

தமிழ்பேசும் கனடிய பாரிஸ்டர்களான ஜெகன் மோகன், திருமதி. தெய்வா மோகன் ஆகியோரின் சட்ட சேவைகள் குடிவரவு சம்பந்தப்பட்ட விடயங்களைக் கவனிக்க கிடைக்கிறது.

புதிதாக வரும் அகதிகள், Backlog எனப்படும் தேக்க நிலையிலிருப்பவர்கள் ஆகிய இரு சாரார்தும் கோரிக்கைகளை நாங்கள் கவனிக்கிறோம். Sponsor எனப்படும் பொறுப்பேற்றுப் பராமரிக்கும் விண்ணப்பங்கள், மற்றும் குடிவரவு மேன்முறையீட்டுச் சபை (Immigration Appeal Board) க்கு விண்ணப்பிக்கும் மேன்முறையீடுகளைத் தயாரித்து ஆஜராகின்றோம்.

குடிவரவு அகதிகள் சபையால் அகதி நிலை கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்கள் மத்திய நீதிமன்ற (Federal Court of Appeal) அப்பீலுக்கு அனுப்பும் விண்ணப்பங்களையும் நாங்கள் கையாளுகின்றோம். அத்துடன் அகதி நிலை நிராகரிக்கப்பட்டு வெளியேற்றக் கட்டளைக்குள்ளாக்கப் பட்டவர்களின் வெளியேற்றக் கட்டளையைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு ஒட்டாவா குடிவரவு தலைமை அலுவலகத்துக்கும் குடிவரவு அமைச்சருக்கும் மனிதாபிமான சமர்ப்பணங்களைத் தயாரித்து வழங்குகின்றோம்.

சட்டஉதவிப் பத்திரம் எங்களால் ஏற்கப்படும்
WE ACCEPT LEGAL AID CERTIFICATE

## MOHAN & MOHAN

Scherwood Centre, 3300 McNicoll Ave., Suite 225, Scarborough, Ontario, M1V 5J6

**(416) 609-8200**

ஜெகன் என். மோகன் LL.B.
*பாரிஸ்டரும் சொலிஸிட்டரும்*

தெய்வா மோகன்
*பாரிஸ்டரும் சொலிஸிட்டரும்*



*தமிழர்கள் மனதில் வைத்திருக்க வேண்டிய பெயர்*
*தமிழர்கள் நினைவில் நிலைத்திருக்க வேண்டிய பெயர்*

# சிவாஸ் ரேடிங் கோ லிமிட்ட்

உங்கள் தேவை என்ன?
மரக்கறிகளா? கடல் உணவுகளா? மீன் வகைகளா?
இலங்கை, இந்திய உணவுப் பண்டங்களா?
தோசை, இடியப்பம், அப்பம் சுடச்சுட சாப்பிட விருப்பமா?
உங்கள் தேவை எதுவானால் என்ன? உடன் எங்களை நாடுங்கள்!
**நீங்கள் கேளுங்கள்! நாங்கள் தருகின்றோம்!**

திருமணங்களுக்குத் தேவையான கூறை, பட்டுவேட்டி, சால்வை, தலைப்பாகை, குத்துவிளக்கு, பூமாலைகள், மணவறை, மண்டபவசதி, விசேஷ உணவு வகைகள் உட்பட அனைத்துத் தேவைகளையும் ஒரே இடத்தில் பெற நீங்கள் உனடியாகத் தொடர்பு கொள்ள வேண்டிய இடம்.

## SIVA'S TRADING CO. LTD

3852 Finch Ave. East, (Kennedy/Finch) Scarborough,

**Tel: 321-2739**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டு முக்கிய செய்திகளும், நிகழ்ச்சிகளும்

## இந்து ஆலய இந்த மாத உற்சவங்கள்

றிச்மன்ட் ஹில் இந்து ஆலய இந்த மாத (அக்டோபர்) விசேஷ உற்சவங்களின் விபரம் வருமாறு:

05 சனி - பிரதோஷம் (சிவன் பூஜை) புரட்டாதி சனி விரதம் (3வது வாரம்)
07 திங்கள் - மாளய அமாவாசை
08 செவ்வாய் - நவராத்திரி விரதாரம்பம்
12 சனி - புரட்டாதி சனி விரதம் (4வது வாரம்)
15 செவ்வாய் - துர்க்கஷ்டமி
17 வியாழன் - விஜயதசமி சரவண உற்சவம் (பெருமாள்) மாதவ ஜெயந்தி
21 திங்கள் - பிரதோஷம் (சிவன் பூஜை)
23 புதன் - பூரணை விரதம்
25 வெள்ளி - கிருத்திகை (ஷண்முக அர்ச்சனை)

## ஸ்காபுரோவில் சாயி பஜனை

ஸ்காபுரோ சாயி சமித்தியினரால் இரண்டு வாரத்துக்கு ஒரு தடவை ஸ்காபுரோ, வூபர்ன் கல்லூரி மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் சாயி பஜனை நடத்தப்படுகின்றது. பிற்பகல் வேளையில் 6 மணி முதல் 7 மணி வரை இந்த பஜனை நடைபெறுகின்றது. அக்டோபர் மாதத்தில் 13ம், 27ம் திகதிகளில் இந்த பஜனை நடைபெறும்.

## நவராத்திரி விரதம் 8ம் திகதி ஆரம்பம்

நவராத்திரி விரதம் அக்டோபர் மாதம் 8ம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகின்றது. அன்று முதல் ஒன்பது நாட்களுக்கும் தினசரி பிற்பகல் 7:30 மணிக்கு றிச்சமன்ட் ஹில் இந்து ஆலயத்தில் நவராத்திரி பூஜை வழிபாடுகள் நடைபெறும். 16ம் திகதி புதன்கிழமை இல்லங்கள் தோறும் சரஸ்வதி பூஜை இடம்பெறும்.

மறுநாள் 17ம் திகதி வியாழக்கிழமை விஜயதசமி தினமாகும். அன்று காலை 10:30 மணிக்கு மேற்படி றிச்மன்ட் ஹில் இந்து ஆலயத்தில் பிள்ளைகளுக்கு ஏடு தொடக்கும் வித்தியாரம்பம் நடைபெறும்.

அன்று மாலை ஏழு மணிக்கு ஆலயத்தில் வாழை வெட்டும் "மானம்பூ" உற்சவம் நடைபெறும்.

## ரொறன்ரோ வீதிகளில் வாகனம் நிறுத்தும் கட்டணமும் உயருகிறது

ரொறன்ரோ மத்திய பிரதேச வீதிகளில் வாகனங்களை நிறுத்துவதற்கான கட்டணம் நூறு மடங்கினால் அதிகரிக்கப்படவுள்ளது. தற்போது மணித்தியாலத்துக்கு ஒரு டாலர் அறவிடப்படும் இடங்களில், இரண்டு டாலர்களை அறவிட முடிவாகி யுள்ளது.

நகரில் கிங்ஸ்டன் வீதியிலிருந்து, ஸ்காபுரோ வரையான பகுதிகளுக்கான வாகனங்களை நிறுத்துவதற்கான கட்டணம் மணித்தியாலத்துக்கு அறுபது சதத்திலிருந்து ஒரு டாலராக அதிகரிக்கும்.

## நூறு டாலர் கள்ளநோட்டுகள் பொதுமக்களே ஜாக்கிரதை!

ரொறன்ரோ பெரும்பாகத்தில் நூறு டாலர் கள்ள நோட்டுகளின் நடமாட்டம் வெகுவாக அதிகரிக்கலாம் என்றும், இதனையிட்டு வர்த்தகர்களும், பொதுமக்களும் விழிப்பாக இருக்கவேண்டும் என்றும் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஸ்காபுரோ, நோத் யோக், ரொறன்ரோ நகரப் பகுதி ஆகியவைகளில் கள்ளநோட்டின் நடமாட்டம் அதிகமாகியுள்ளதாக பொலிஸ் அதிகாரி மைக் கொவி கூறுகின்றார். சில வங்கிகளும் கூட இதனால் ஏமாற்றப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவிக்கின்றார். ஸ்காபுரோவில் மட்டும் எட்டு இடங்களில் கள்ள நோட்டுகளின் மோசடி இடம்பெற்றுள்ளது.

அநேகமான நூறு டாலர் கள்ளநோட்டுகளும் AJL 9129917, AJL 9196449, AJD 6410597 ஆகிய இலக்கங்களை தாங்கியிருப்பதாகவும் பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

பல இளம் வயதினரே இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளதையிட்டு தாம் மிகுந்த கவலையடைந்துள்ளதாகப் பொலிஸ் அதிகாரி ஒருவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## தமிழர்களின் முதலாவது கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

ரொறன்ரோவில் தமிழர்களால் நடத்தப்பட்ட முதலாவது கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி கடந்த ஆகஸ்ட் மாதம் 24ம் திகதி கிப்ளிங் (Kipling) புளூஸ் விளை யாட்டுக் கழகத்தினரால் நடத்தப்பட்டது.


பதினெட்டு விளையாட்டுக் கழகங்கள் இதில் பங்கு பற்றின. ரொறன்ரோ ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினர் முதலாம் இடத்தையும், அரியாலை இளைஞர் விளையாட்டுக் கழகத்தினர் இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.

திரு.கணேஷ் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு வைபவத்தில் இலங்கை சட்டத்தரணியான எஸ்.கே.மகேந்திரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இப்போட்டியில் சிறந்த விளையாட்டு வீரராக மொன்றியல் புளூஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த குணசேகரன் தெரிவானார். சிறந்த வலைப்பந்தாளருக்கான விருது ரொறன்ரோ ஐக்கிய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த அரவிந்தனுக்கு வழங்கப்பெற்றது.

## இவர்களும் கல்வி பயிலலாம்

வேலையில்லாத காலத்து காப்புறுதிப் பணம் (Unemployment Insurance) பெறும் கனடியர்கள், தங்களின் காப்புறுதிப் பணத்தைப் பாதிக்காத வகையில் அடிப்படை மொழிக் கல்வி வகுப்புகளிலும், தங்களின் தொழிலை முன்னேற்றுவதற்கான பயிற்சி வகுப்புகளிலும் தற்போது பங்குபற்ற முடியும். Unemployment Insurance (UI) சட்டத்தின் 26வது பிரிவின் பிரகாரம், தங்களது காப்புறுதிப் பணத்துக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாத வகையில் மேற்படி வகுப்புகளில் விரும்புவர்கள் பங்குபற்றக் கூடியதாக சட்டம் விரிவு படுத்தப்பட்டுள்ளது. இதற்கான முழுநேர வகுப்புகளில் பங்கு பற்றுவதற்கு, அந்தப் பகுதி Canada Employment Centreல் முன் அனுமதி பெற வேண்டியது அவசியமாகும்.



## ஆடிப் பூரத்தில் அம்மன் வீதிவலம்

றிச்மன்ட் ஹில் இந்து ஆலயத்தில் ஆடிப்பூர விழா நடைபெற்ற வேளை, மங்கல வாத்தியங்கள் முழங்க முத்தச்சப்பரத்தில் பக்தர்கள் புடைசூழ சுவாமி எழுந்தருளி வீதி வலம் வரும் காட்சி இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களைக் கவர்ந்திடும்
வண்ணமிகு வனிதையர்தம்
வனப்பான மேனியின்
வளத்துக்கு மெருகூட்டும்
22 காரட் தங்க நகைகளுக்கு

நம்பிக்கையும் நாணயமும் நற்பெயரும் பெற்ற நிறுவனம்

# வசந்தா நகைமாளிகை

விரும்பும் டிசைனில் குறித்த தவணையில் நகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்

1230 Bloor Street West, Toronto
Tel: (416) 536-3956



உ

# "ஸ்ரீ விஜயலக்ஷ்மி வாசா"

திருமணம் மற்றும் இந்துமத கிரிகைகள் சேவைக்கும்



- முத்து மணவறை
- சடைநாகம்
- தலைப்பாகை
- நாதஸ்வரம், தவில்
- முத்துப்பல்லக்கு
- பூமாலை
- தலைநகை
- மண்டப அலங்காரம்
- பூந்தண்டிகை
- பூமாலைகள்
- அபிஷேகத் திரவியங்களுக்கும்

தொடர்பு கொள்ள வேண்டியவர்

"சிவாகம பூஷணம்"
சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜக் குருக்கள்
(திருமண பதிவு அதிகாரி)
243 MARGHERETTA ST., TORONTO, ONT. M1H 3S4 CANADA
T.PHONE: **534-0011**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்ராறியோ மாநில தொழில் தகுதிச் சட்டம் தொழிலாளர் நலனை பேணிப்பாதுகாக்கின்றது

# EMPLOYMENT STANDARDS ACT AT A GLANCE

கனடா பல இன மக்களையும், பல மொழி பேசும் மக்களையும் உள்ளடக்கிய ஒரு நாடு. ஒவ்வொரு இன மக்களும் தங்களின் பாரம்பரிய மொழியையும், தங்கள் கலை, கலாசாரங்களையும் பேணவும், வளர்க்கவும் இங்கு உரிமையுண்டு. அதேசமயம் இனம், மொழி, மதம், கலாசாரப் பின்னணி ஆகியவைகளைக் காரணமாகக் கொண்டு எவரும் பாதிக்கப்படாதிருப்பதற்காக கனடாவில் பல சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இவற்றுள் முக்கியமானது ஆங்கிலத்தில் Employment Standards Act என்று கூறப்படும் தொழில் தகுதிச் சட்டம். ஒவ்வொரு மாநில அரசாங்கங்களும் தங்கள் மாநிலத்துக்கென தனியான தொழில் தகுதிச் சட்டங்களை அமல் செய்துவருகின்றன. இந்தக் கட்டுரையில், ஒன்ராறியோ மாநில தொழில் தகுதிச் சட்டத்தைக் கவனிப்போம்.

தொழில் வழங்குபவர்கள், தொழில் புரிபவர்களின் உரிமைகள், கடமைகள் ஆகியவை பற்றிய சில அடிப்படையான தகவல்கள் மட்டும் இங்கு தரப்படுகின்றன. அவசியமேற்படின், தொடர்ந்து வரும் தமிழர் தகவல் இதழ்களில் மேற்படி சட்டம் தொடர்பான மேலதிக தகவல்கள் தரப்படும்.

ஒன்ரோறியோ மாநிலத்தில் பல்வேறு தொழில்களையும் செய்யும் பெரும்பாலானவர்களும் இந்தச் சட்டத்துக்குட்பட்டவர்கள். ஆனாலும் சில குறிப்பிட்ட துறையைச் சேர்ந்தவர்கள் இந்தச் சட்டத்தின் சில பகுதிகளிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர். மத்திய அரசாங்கத்தின் கீழ் பணிபுரிபவர்கள், அல்லது மத்திய அரசின் ஆணைக்குட்பட்டியங்கும் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்கள் ஒன்ராறியோ தொழில் தகுதிச் சட்டத்துக்கு புறம்பானவர்களாவர்.

ஒவ்வொரு தொழில் புரிபவருக்கும் தொழில் வழங்குபவர்கள் ஆகக் குறைந்த சம்பளத்துக்குக் (Minimum Wage) குறையாத சம்பளம் வழங்க வேண்டியது கட்டாயம். இது மணித்தியாலத்துக்கென்று வரையறுக்கப்பட்டது. இந்தச் சம்பளநிலை காலத்துக்குக் காலம் மாறுபடும்.

ஒரு ஆணும், ஒரு பெண்ணும் ஒரே தொழிலைச் செய்பவர்களானால், அவர்களுக்கு தொழில் வழங்குபவர் சமமான சம்பளம் வழங்கவேண்டும். இங்கு ஆண், பெண் என்ற பாகுபாடு காட்ட முடியாது.

ஒரு வாரத்தில் நாற்பத்து நான்கு மணித்தியாலயங்களுக்கு மேல் வேலை செய்தால் Over Time Pay என்று கூறப்படும் மேலதிக வேலைச் சம்பளம் வழங்கப்பட வேண்டும். தினசரி எட்டு மணித்தியாலங்களுக்கு மேல் வேலை செய்தால், மேலதிக வேலைச் சம்பளம் அதிலிருந்து ஆரம்பிக்கப்படும் என்றில்லை. ஒருவருடைய வழக்கமான சம்பளத்திலிருந்து ஒரு மடங்கு அல்லது ஒன்றரை மடங்கு அதிகமாக மேலதிக வேலைச் சம்பளம் வழங்கப்படும்.

ஒருவர் தினமும் எட்டு மணித்தியாலங்கள் (8) வேலை செய்வர். ஆகக் கூடுதலாக வாரமொன்றுக்கு நாற்பத்தெட்டு (48) மணித்தியாலங்கள் வேலை செய்யலாம். இதற்கு மேல் வேலை செய்வதானால் வேலை வழங்குபவர் அதற்கான விசேஷ அனுமதி (Special Permit) பெற்றிருக்க வேண்டும்.

அநேகமான சந்தர்ப்பங்களில், எவரும் தினசரி எட்டு மணித்தியாலயங்களுக்கு மேல் வேலை செய்ய வேண்டியதில்லை. அதே போல வாரமொன்றுக்கு நாற்பத்தெட்டு (48) மணித்தியாலங்களுக்கு மேல் வேலை செய்ய வேண்டுமென்று கட்டாயப்படுத்த முடியாது.

தொழிற்சாலைகளைப் பொறுத்த வரையில் அவை ஞாயிற்றுக்கிழமைகளில் செயற்படுவதைச் சட்டம் தடுக்கவில்லை. இங்கு எந்த நாட்களிலும் வேலைக்கு வருமாறு தொழில் வழங்குபவர் கேட்கலாம். ஆனால் சில்லறைப் பொருட்கள் விற்பனை நிலையங்களில் பணிபுரிபவர்கள், சிலவேளைகளில் ஞாயிற்றுக்கிழமைகளில் வேலைக்குச் செல்ல மறுப்புத் தெரிவிக்கலாம்.

பன்னிரண்டு மாதங்கள் ஒரு இடத்தில் வேலை செய்தால் சம்பளத்துடன் இரண்டு வார (Two Weeks) விடுமுறை வழங்கப்பட வேண்டும். கடைசி 12 மாதங்கள் ஒருவருக்கு வழங்கப்பட்ட சம்பளத்தின் அடிப்படையில் விடுமுறை காலத்துக்கான சம்பளம் நிர்ணயிக்கப்படும்.

கனடாவில் வருடமொன்றுக்கு எட்டு பொது விடுமுறை தினங்கள் பிரகடனம் செய்யப்பட்டுள்ளன. New Years' Day, Good Friday, Victoria Day, Canada Day, Labour Day, Thanksgiving Day, Christmas Day, Boxing Day (December 26) ஆகியவை இந்த எட்டு விடுமுறை தினங்களாகும்.

மேற்குறிப்பிட்ட எட்டு விடுமுறை தினங்களும் சம்பளத்துடனான வேலையற்ற நாட்களாகும். ஆனால், இந்த விடுமுறை நாளொன்றில் ஒருவர் வேலை செய்ய வேண்டியிருந்தால், அதற்குப்பதிலாக இன்னொரு நாளை சம்பளத்துடனான விடுமுறை நாளாக வேலை வழங்குபவர் வேலை செய்பவருக்கு வழங்க வேண்டும்.

பிரசவ லீவு முறையில் *1990ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சில மாற்றங்கள்* கொண்டு வரப்பட்டன. இந்தத் திட்டத்தின் கீழ் *17* வாரங்களுக்கு பிரசவ லீவு வழங்கப்படும். பிரவசத்திற்குப் பதினொரு *(11)* வாரங்களுக்கு முன்னர் இது ஆரம்பமாகும். (இது பற்றிய விபரமான கட்டுரையொன்று தமிழர் தகவலின் கடந்த மார்ச் மாத இதழில் வெளியாகியுள்ளது)

பிரசவத் தாய் ஒவ்வொருவரும் பிரசவத்திற்குப் பின்னர் ஆறு *(6)* வார விடுமுறையை கட்டாயமாகப் பெறுவர்.

கனடிய பிரஜாவுரிமை பெற்றவர்களும் (Canadian Citizens) கனடாவில் நிரந்தரமாகக் குடியிருக்க உரிமை பெற்றவர்களும் (Landed Immigrants) இங்கு எந்த வேலையையும் செய்வதற்கு உரிமையுள்ளவர்களாவர்.

வெளிநாடுகளிலிருந்து படிப்பதற்கு வந்துள்ள மாணவர்கள் (Foreign Students), அகதி நிலைக் கோரிக்கையாளர்கள் (Refugee Claimants), அமைச்சரின் பத்திரம் வைத்திருப்பவர்கள் (Holders of Minister's Permit) இங்கு வேலை செய்வதாயின் அதற்கான அனுமதிப் பத்திரத்தையும் (Work Permit), சமூக காப்புறுதி இலக்க அட்டையையும் (Social Insurance Number) வைத்திருக்க வேண்டும். இவைகளை முறையே குடிவரவு, வேலை வாய்ப்பு அலுவலகங்களில் நேரடியாகச் சென்று விண்ணப்பம் செய்து பெற முடியும்.

ஒன்ராறியோ தொழில் தகுதிச் சட்டம் பின்வரும் தொழிற் துறைகளில் அமல் செய்யப்படமாட்டாது என்பதை கவனத்தில் வைத்திருப்பது அவசியம்:

கனடிய மத்திய அரசு அலுவலகங்களின் ஊழியர்கள், மற்றும் மத்திய அரசின் தொழிற் சட்டத்தின் கீழ் செயற்படும் விமானப் போக்குவரத்து நிறுவனங்கள், விமானப் போக்குவரத்து நிலையங்கள், வங்கிகள், Bell Canada தொலைபேசி நிறுவனம், கப்பல், ரயில், பஸ் சேவை நிறுவனங்கள், தபால் அலுவலகங்கள், வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள் ஆகியவற்றின் ஊழியர்கள் இதற்குள் அடங்கமாட்டார்கள்.

மேற்குறிப்பிட்ட பல்வேறு விடயங்களில் எந்தவொரு பகுதியிலாவது பிரச்சனை, பிணக்கு உள்ள வேலை புரிபவர் தமக்கு மிக அருகாமையிலுள்ள Employment Standards Office உடன் தொடர்பு கொண்டு அவர்களின் கவனத்துக்கு அதனைக் கொண்டு வரலாம். மேற்படி அலுவலகங்களின் தொலைபேசி இலக்கத்தை தொலைபேசிப் புத்தகத்தின் நீலப் பக்கத்தில் Government of Ontario - Labour என்ற தலைப்பின் கீழ் காணலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் சேவையை விஸ்தரிப்பதற்கு பொதுமக்கள் ஆலோசனை கோரப்படுகின்றது

## POLICE SERVICES BOARD SEEKS PUBLIC VIEWS

ரொறன்ரோ பெரும்பாகத்தில் வசிக்கும் மக்களுக்கு பொலிஸ் படையினரின் சேவையை விரிவாகக் கிடைக்கச் செய்யவும், பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவை மேலும் இறுக்கமடையச் செய்யவும் பொலிஸ் துறையில் அடுத்து வரும் ஆண்டுகளில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய ஆலோசனைகளை பொலிஸ் சேவைச் சபை இப்போது பொதுமக்களிடம் கோரியுள்ளது.

"2000ம் ஆண்டுக்குப் பின்னர்....." என்ற தலைப்பில் மெற்ரோ பொலிஸின் எதிர்கால வளர்ச்சி, செயற்திட்டம் ஆகியவைகள் பற்றியே ஆலோசனை பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு இன மக்களினதும் பிரதிநிதிகள் நேரடியாக தங்கள் ஆலோசனைகளை வழங்கக் கூடியதாக இரண்டு கூட்டங்களை பொலிஸ் சேவைச்சபை ஏற்பாடு செய்துள்ளது. ரொறன்ரோ கொலிஜ் வீதி, 40ம் இலக்கத்திலுள்ள பொலிஸ் தலைமைக் காரியாலய கேட்போர் கூடத்தில் இந்தக் கூட்டங்கள் நடைபெறும் என்று பொலிஸ் சேவைச் சபையின் தலைவரான சுஸான் எங் அறிவித்துள்ளார்.

முதலாவது ஆலோசனைக் கூட்டம் அக்டோபர் மாதம் மூன்றும் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4:30 மணி முதல் 8:30 மணி வரை நடைபெறும். இரண்டாவது கூட்டம் 1992ம் ஆண்டு ஜனவரி மாதம் 16ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிமுதல் 8 மணிவரை நடைபெறும்.

இரண்டு விடயங்கள் தொடர்பாக பொதுமக்களின் ஆலோசனைகள் முக்கியமாகப் பெறப்படும். முதலாவது பாதுகாப்பு.

துன்புறுத்தல், பழிவாங்கல், காடைத்தனம் ஆகியவைகளைக் குறைக்கவும், பொதுமக்களை இவ்விடயங்களில் பாதுகாக்கவும் பொலிஸாரும் பொதுமக்களும் எவ்வாறு இணைந்து செயற்பட முடியும்?

குடும்ப சச்சரவுகள், பிள்ளைகளைத் துன்புறுத்துதல், பாலியல் வன்முறைகளை எவ்வாறு கட்டுப்படுத்த முடியும்?

அதிகரித்துவரும் வன்முறைக் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதில் வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் எவ்வாறு பங்காற்ற முடியும்? இன-சமூக சேவை நிறுவனங்களின் பங்களிப்பு எந்தளவில் இதற்குப் பயன்படும்?

வாகனப் போக்குவரத்து நெருக்கடி, மதுபோதைவஸ்துப் பாவனை அதிகரிப்பு

**எஸ்.ரி.சிங்கம்**

ஆகிய விடயங்களில் பொதுமக்கள் - அயலவர் சங்கங்கள் எந்தளவுக்கு பொலிஸாருக்கு ஆலோசனை வழங்க முடியும்? போன்ற விடயங்கள் "பாதுகாப்பு" என்ற தலைப்பின் கீழ் ஆராயப்படும்.

இரண்டாவது விடயம் "தொடர்பும் சமுக அபிவிருத்தியும்" என்பதாகும்.

குற்றச் செயல்களை ஒழிப்பதில் பொதுமக்களைக் கூடுதலாகப் பங்குபற்றச் செய்வதற்கு பொலிஸார் என்ன செய்யலாம்?

பொலிஸாருக்கும் பல்வேறு இன, குழு, அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்குமிடையில் எவ்வாறு நெருக்கத்தை ஏற்படுத்த முடியும்? இவர்களுக்கிடையிலான தொடர்பு அதிகரிப்பின் மூலம் பொதுமக்களின் பங்களிப்பை எவ்வாறு விஸ்தரிக்க முடியும்?

பொலிஸ் சேவைச் சபை பொதுமக்களுடன் எவ்வாறு தொடர்பை அதிகரிக்கச் செய்ய முடியும்?

பொலிஸ்-பொதுமக்கள் நல்லுறவுக் குழுக்களின் செயற்பாட்டை எவ்வாறு மேலும் விரிவடையச் செய்து, அதன் மூலம் ஆக்கபூர்வமான ஆலோசனைகளைப் பெற முடியும்? என்ற விடயங்கள் பற்றி இரண்டாவது தலைப்பின் கீழ் ஆராயப்படும்.

அதேசமயம், பொலிஸ் சேவைச் சபையின் கீழ் இளைஞர் குழுவொன்றினை (Police Services Board Youth Committee) அமைக்கவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

செப்டெம்பர் மாதம் 5ம் திகதி நடைபெற்ற சபையின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

புதிதாக உருவாக்கப்படும் இளைஞர் குழு மாதம் ஒரு தடவை கூடும். தங்களுக்கான செயற் திட்டங்களை அந்தக் குழுவே தயாரிக்கும். தற்போது பொலிஸ் சேவையுடன் சம்பந்தப்பட்ட விடயங்களில் இளைஞர்களின் பங்களிப்பு மிகக் குறைவாக இருப்பதால் தனியான குழுவொன்றை இதற்கென அமைப்பதன் மூலம் இளைஞர்களின் சேவையைக் கூடுதலாகப் பெற முடியும் என்று கருதப்படுகின்றது.

இனப்பாகுபாடு காட்டுதல்,வறுமை, இளைஞர் குற்றச் செயல் அதிகரிப்பு போன்ற விடயங்களில் முன்னுரிமை வழங்கி இளைஞர் குழுவைச் செயற்படுத்த திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. பல்வேறு பாடசாலைச் சபைகளினதும் உதவி இதற்குப் பெறப்படும்.

# ஒன்ராறியோவில் பிறப்பு வீதம் அதிகரிப்பு

## பெயர் வரிசையில் மைக்கல், ஜெஸிகா முன்னணி

### BIRTH RATES SKYWARD - LAST YEAR 160,000

ஒன்ராறியோவில் பிள்ளைகள் பிறப்பு வீதம் எதிர்பார்த்ததை விட அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அநேகமான பெற்றோரும் தங்களுக்குப் பிள்ளைகள் வேண்டும் என்று நாட்டம் கொண்டுள்ளதாலேயே பிள்ளைகள் பிறப்பு வீதம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

1990ம் ஆண்டு இங்கு 160,000 பிள்ளைகளின் பிறப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. இத்தொகை 1989ம் பார்க்க 4000ஞல் அதிகம் என்று கனடா குடிசன புள்ளி விபரப் பகுதி சுட்டிக் காட்டியுள்ளது.

ஒன்ராறியோவில் பிறக்கும் பிள்ளைகளில் 1990ம் ஆண்டில் ஆண் குழந்தைகளே அதிகமாகவிருந்ததையும் மேற்படி புள்ளி விபரம் தெரிவிக்கின்றது.

பிள்ளைகளுக்குப் பெயர்சூட்டுவது தொடர்பான தகவலொன்றும் வெளியாகியுள்ளது. இது மிகவும் சுவராஸ்யமானது.

அநேகமான பெற்றுரும் தங்கள் ஆண் குழந்தைகளுக்கு மைக்கல் (Michael) என்ற பெயரையே விரும்பிச் சூட்டுகின்றனர். 1990ம் ஆண்டில் ஒன்ராறியோவில் 2634 ஆண் குழந்தைகளுக்கு மைக்கல் என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

அதேபோல பெண் குழந்தைகளில் மிகவும் பிரபல்யம் பெற்று முதலிடம் வகிப்பது ஜெஸிகா (Jessica) என்னும் பெயர். 1990ம் ஆண்டில் 2088 பெண் குழந்தைகளுக்கு இந்தப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

புதிய குழந்தைகளுக்குப் பெயர் சூட்டும் விடயத்தில் மைக்கல் என்ற பெயர் ஆண் குழந்தைகளுக்கு 1984ம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக ஏழு வருடங்கள் முதலிடம் பெற்று வருவதாகவும், பெண் குழந்தைகளுக்கு ஜெஸிகா என்ற பெயர் 1987ம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக நான்கு வருடங்கள் முதலிடம் வகித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1990ம் ஆண்டில் முதல் ஐந்து இடங்களையும் வகித்த பெயர்களை இங்கு பார்ப்போம்:

| ஆண் குழந்தைகள் | | பெண் குழந்தைகள் | |
|---|---|---|---|
| மைக்கல் | 2,634 | ஜெஸிகா | 2,088 |
| மத்தியூ | 2,114 | ஸரா | 1,513 |
| கிறிஸ்தோபர் | - 1,907 | ஸ்ரீபனி | - 1,502 |
| அன்ட்றூ | 1,743 | அமண்டா | - 1,452 |
| டானியல் | - 1,470 | சமந்தா | - 1,443 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த பல ஆண்டுகளாக
பல இன மக்களின் நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்று
நகை வியாபாரத்தில் முன்னணி வகிக்கும் ஒரே இடம்
உத்தரவாதமுள்ள 22 கரட் தங்கத்தாலான
சகலவிதமான ஆபரணங்களுக்கும்
மிக நியாயமான விலையில்
மல்லிகை மொட்டு மாலைகள், செயின்கள்,
அட்டியல், தாலிக்கொடி மற்றும் இதர தேவைகளுக்கும்
உங்களின் நகை திருத்த வேலைகளுக்கும் நாடுங்கள்

**நித்தியா ஜுவலர்ஸ்**

*1620 Gerrard Street East, Toronto, Ont. M4L 2A5*

***(416) 465-5065***

அழகுக்கு அழகு தருவது
அம்பிகாவின் தங்க நகைகளே!

உங்கள் சேமிப்பை
மாற்றுக் குறையா தங்கமாக்குங்கள்

*மிஸிஸாகவில்*

**அம்பிகா நகை மாளிகை லிமிரெட்**

AMBIKA JEWELLERS LTD.

25 AGNES AVE. UNIT 4A
MISSISSAUGA, ONT.
(DUNDAS & HWY10 சந்தியில்)

TEL: (416) 270-6921

நங்கையர் விரும்பும்
அற்புதமான தங்க நகைகளை
22 கரட் தங்கத்தில் பெற
நீங்கள் நாட வேண்டிய இடம்

*ஸ்காபுரோவில்*

**லலிதா நகை மாளிகை**

கென்னடி சப்வே சென்றர்

LALITHA JEWELLERY LTD.

2425 EGLINTON AVE. EAST, UNIT#6A
SCARBOROUGH, ONT. M1K 5G8

TEL:(416) 757-6568
கார் நிறுத்தும் இடவசதிகளுண்டு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புளூ காய்ச்சல் வராமல் தடுக்கும் ஊசி மருந்து ஏற்றி விட்டீர்களா?

## FLU SHOTS SAVE LIVES

நோய்களில் மிகவும் பிரபல்யமானது 'புளூ' காய்ச்சல். ஆங்கிலத்தில் இதனை Influenza என்று சொல்வர். இதன் சுருக்கமே Flu-புளூ என்பதாகும்.

ஒவ்வொரு வருடமும் செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில் ஆயிரக் கணக்கான கனடிய மக்களை இந்த புளூ காய்ச்சல் பாதிக்கின்றது. வேலைத் தளங்கள், பாடசாலைகள், நெருக்கமான பஸ், ரயில் பயணங்கள் ஆகியன புளூ காய்ச்சலை வெகு வேகமாகப் பரப்பும் மையங்களாக அமைந்துள்ளன. முக்கியமாக சிறுவர்களான பாடசாலைப் பிள்ளைகளையே புளூ காய்ச்சல் இலகுவாகத் தொற்றிக் கொள்ளுகிறது.

புளூ காய்ச்சல் தொற்றிக் கொள்ளாமல் தடுப்பதற்கு முற்கூட்டியே ஊசி மருந்தை ஏற்றிக் கொள்ளலாம். இதனை 'Flu-Shot' என்று இங்கு கூறுவார்கள். அநேகமாக சகல சிகிச்சை நிலையங்களிலும் இந்த ஊசி மருந்தை ஏற்ற முடியும்.

உங்கள் குடும்ப டாக்டருடன் தொடர்பு கொண்டால் அதற்கான வழிமுறைகளை அவர் கூறுவார். சிறு தொகை கட்டணம் 'Flu-Shot' ஊசி மருந்து ஏற்றுவதற்காக அறவிடப்படும்.

இந்த ஊசி மருந்தை முற்கூட்டியே ஏற்றுவது நோய் வராமல் தடுப்பதற்கான சிறந்த வழி என்று டாக்டர்கள் கூறுகின்றனர். வயது, பால் வித்தியாசமின்றி அனைவருக்கும் இது பொதுவானது. ஆனால் சில உணவு வகைகள் ஒத்துக் கொள்ளாதவர்களுக்கு (Allergic) மட்டும் இதனை ஏற்ற முடியாது.

இருதய நோயளிகள், ஆஸ்த்மா நோயாளிகள், சலரோகக்காரர்களுக்கு புளூ காய்ச்சல் தொற்றுவதால் அவர்கள் மிக மோசமாகப் பாதிக்கப்படுகின்றனர். எனவே இவர்கள் தங்களுக்கான 'Flu-Shot' ஊசி மருந்து ஏற்றுவது தொடர்பாக தங்கள் குடும்ப டாக்டருடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுப்பது சிறந்தது.

# அமைச்சரின் மனைவிக்கு விமான நிலையத்தில் தண்டம்!

கனடாவின் சர்வதேச வர்த்தக அமைச்சர் மைக்கல் வில்சனின் மனைவியான மார்கிரட் வில்சன், ஈரானிலிருந்து கொண்டு வந்த நிலவிரிப்பு ஒன்றை, விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளுக்குத் தெரிவிக்காது விட்டதனால் *1012* டாலர்களை தண்டப் பணமாக செலுத்த நேர்ந்தது. *4500* டாலர்கள் பெறுமதியான இந்த நிலவிரிப்பை, தமது கணவரான அமைச்சருடன் உத்தியோகபூர்வ விஜயமொன்றை ஈரானுக்கு மேற்கொண்டு விட்டுத் திரும்பும் போது இவர் விமானத்தில் கொண்டு வந்திருக்கிறார்.

மேற்படி விரிப்புக்கு GST வரிப்பணமாக *804* டாலர்களை சுங்க அதிகாரிகள் விதித்தனர். இந்தச் சம்பவம் ஆகஸ்ட் மாதம் *18*ம் திகதி புதன்கிழமை ஒட்டாவா சர்வதேச விமான நிலையத்தில் நடைபெற்றதாக ரொறன்ரோ ஸ்டார் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஈரானின் தலைநகரான தெஹ்ரானில் நடைபெற்ற மகாநாடொன்றில் பங்குபற்றிவிட்டு கனடிய பாதுகாப்பு அமைச்சு விமானமொன்றில் அமைச்சர் தமது மனைவியுடன் வந்தபோது, இந்தத் தண்டனையும், வரிவிதிப்பும் நடைபெற நேர்ந்தது. தற்போது வர்த்தக அமைச்சராகவிருக்கும் வில்சன், முன்னர் நிதி அமைச்சராக இருந்த போது பிரச்சனைக்குரிய GST வரி அமலுக்குக் கொண்டு வரப்பட்டது என்று மேற்படி பத்திரிகைச் செய்தி சுட்டிக் காட்டியுள்ளது.




ஸ்ரீ சிவா ஜுவலறி

721 Bloor St. W, Suite 2C, Toronto, Ontario

(416) 531-4867




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org